
# 10. தாமஸ் ஜெபர்சன்
## (Thomas Jefferson, 1801-1809)

ஜான் ஆடம்சுக்கு அடுத்தபடியாக அமெரிக்க குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றவர் வர்ஜினியாவைச் சேர்ந்த தாமஸ் ஜெபர்சன் ஆவர். இவரது வெற்றி அமெரிக்காவில் கூட்டாட்சியினர் ஆட்சிக்காலத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து குடியாட்சி கட்சியினரின் சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தது. மக்களாட்சி கோட்பாட்டின் மீது அதிக பற்றுடையவராக இருந்தார். எட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இவர் மக்களாட்சிக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தினார். ஜெபர்சனின் அறிவும் ஆற்றலும் பல்வேறு துறைகளிலும் வெளிப்பட்டன. உண்மையில் எளிமையும், தூய்மையும், சுறுசுறுப்புமான வாழ்க்கை வாழ்ந்தார். நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புகளை நன்குணர்ந்து அதனடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டார் எல்லா வற்றிலும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார் தாமஸ் ஜெபர்சன். புதிய தலைநகர் வாஷிங்டனில் பதவி ஏற்ற முதல் குடியரசுத் தலைவர் ஜெபர்சன் ஆவார்.



தாமஸ் ஜெபர்சன்

### ஜெபர்சனின் வாழ்க்கைக் குறிப்பு :

தாமஸ் ஜெபர்சன் வர்ஜினியாவில் ஒரு பெருந்தோட்ட முதலாளி குடும்பத்தில் 1743-ல் பிறந்தார். வில்லியம் மேரி கல்லூரியில் கிரேக்கம், லத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளைக் கற்றார். பின்னர் சட்டப்படிப்பிலும் தேறி வழக்கறிஞர் தொழிலையும், பண்ணை நிர்வாகத்தையும் கவனித்து வந்தார். தனது 26-ம் வயதில் வர்ஜினியா சட்டமன்ற உறுப்பினரானார். அப்போது இவர் எழுதிய 'பிரிட்டிஷ் அமெரிக்காவின் உரிமைகள் பற்றிய கருத்து' என்ற நூல் புகழ் பெற்றதாகும்.

சுதந்திரப் பிரகடனத்தை வரைந்தவர்களில் ஜெபர்சனே குறிப்பிடத்தக்கவர் ஆவார். அதில் ஜெபர்சன் கையாண்ட அருமையான இலக்கிய நடை படிப்போரது மனதை இன்றும் ஈர்க்கிறது.

பின்னர் மீண்டும் வர்ஜினியா சட்டமன்றத்தின் உறுப்பினரானார். அப்போது திருச்சபையையும் அரசையும் பிரித்தல், பொதுப் பள்ளி முறையை அமைத்தல், அடிமை வியாபார ஒழிப்பு, அடிமைகள் விடுதலை போன்ற நல்ல நடவடிக்கைகளுக்கு காரணமாகி மக்களிடம் புகழ் பெற்றார். விடுதலைப் போரின்போது வர்ஜினியாவின் ஆளுநராகவும் பணிபுரிந்தார். பின்னர் நெகிழ் கூட்டாட்சியரசில் 1783-84 வரை இரண்டு ஆண்டுகள் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தார். அப்போது தசமநாணய முறை, நில அவசரச் சட்டம் போன்ற முக்கியமான நடவடிக்கைகளுக்குக் காரணமாக இருந்தார். அதன் பின் பிரெஞ்சுத் தூதுவராக பெஞ்சமின் பிராங்ளினுக்குப் பிறகு நியமிக்கப்பட்டார். பின்னர் வாஷிங்டன் காலத்தில் முதலாவது வெளிஉறவுத் துறைச்செயலராக1789-93 வரை நான்கு ஆண்டுகள் பதவிவகித்தார். பின்னர் ஜான் ஆடம்சுக்கு துணை குடியரசுத் தலைவராக நான்கு ஆண்டுகள் பணி செய்தார்.

இவ்வாறு பல்வேறு பதவிப் பொறுப்புகளிலும் அரசியல் நடவடிக்கைகளிலும் பெரும்பங்கு பெற்று தனது அளப்பறிய ஆற்றலை வெளிப்படுத்தியவர் ஜெபர்சன் ஆவார். ஜெபர்சனின் அறிவும் ஆற்றலும் பல்வேறு துறைகளிலும் வெளிப்பட்டன. கூறிய மதி படைத்த அரசியல்வாதியாகவும், தூதுவராகவும், தத்துவ அறிஞராகவும், சிறந்த எழுத்தராகவும், கல்வியாளராகவும், ஆராய்ச்சியாளராகவும், முற்போக்கு குடியானவராகவும் திகழ்ந்தார் ஜெபர்சன். அதேசமயம் தனது கட்சியை வளர்ப்பதிலும், நல்ல நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்த முடிந்தது.

## 1800–ம் வருடப் புரட்சி : The Republican Revolution

1800ம் வருடம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜெபர்சன் வெற்றியடைந்து அமெரிக்காவின் மூன்றாவதுகுடியரசுத்தலைவரானார். இந்தத்தேர்தல் பல வகைகளில் 'குடியரசுக் கட்சியினரின் புரட்சி' (Republication Revolution) என்று போற்றப்படுகிறது. பன்னிரெண்டு ஆண்டு களாக இருந்த கூட்டாட்சிவாதிகளின் சகாப்தம் முடிந்தது. அத் துடன் கொள்கைகளிலும், செயல் முறையிலும் முற்றிலும் மாறுபட்ட குடியரசுக்கட்சியினர் கைக்கு அரசு மாறியது. தாமஸ் ஜெபர்சன் அந்தப் புரட்சியின் சின்னமாகக் கருதப்படு கிறார். தனி மனிதரின் உரிமை, மாநிலங்களின் சுதந்திரம் ஆகிய கோட்பாடுகளைப்

பின்பற்றி ஜெபர்சன் பதவிக்கு வந்தது உண்மையிலேயே அமெரிக்க வரலாற்றில் ஒரு புரட்சிதான்.

ஆனால் இந்த ஆட்சி மாற்றத்தை ஒரு புரட்சி என்று கூறுவது பொருத்தமானதாக இருக்காது. காரணம் தனது எல்லாக் கருத்துக்களையும் செயல்படுத்தும் எண்ணத்துடன் தான்குடியரசுத்தலைவரானார். ஆனால் பதவியின் உண்மையான பாரத்தை உணரத்தொடங்கிய இவர் தனது கொள்கைகளை ஓரளவு தளர்த்திக் கொண்டார். எனவே தான் இவரது ஆட்சியில் அரசியலிலோ சமுதாயத்திலோ அடிப்படை யான மாறு தல் எதுவும் செய்யப்பட வில்லை. சிறிய விஷயங் களில் மட்டுமே தனது கொள்கைகளைக் கடைப்பிடிக்க முடிந்தது. பெரியவிஷயங்களில்கூட்டாட்சிக்கட்சியினரின் கோட்பாடு களையே பின்பற்ற வேண்டியதிருந்தது.

## ஜெபர்சனின் பதவியேற்பு

புதிதாகக் கட்டப்பட்ட தலைநகர் வாஷிங்டனில் முதலா வது பதவி ஏற்ற குடியரசுத் தலைவர் ஜெபர்சன் ஆவார். இவர் மிக எளிமையாகப் பதவி ஏற்றார். எளிமையான உடை உடுத்தி அவ்வாறே தோற்றமளித்து தனது நண்பர்களுடன் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு நடந்தே வந்தார். வாக்குறுதி கூறி பதவியேற்றவுடன் 1801-மார்ச் 4-ம் தேதி இவர் ஆற்றிய சொற் பொழிவு பதவி ஏற்கும் குடியரசுத் தலைவர்கள் இதுவரை ஆற்றிய சொற்பொழிவுகளில் மிகச்சிறந்ததாக இருந்தது'.

ஜெபர்சன் தனது செய்தியில் எல்லோரும் எதிர்பாத்த மாநில உரிமைகள் மற்றும் தனிமனித சுதந்திரம் பற்றிக் குறிப் பிட்டார். அவர் கட்சி வேறுபாடுகளை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை.தேர்தலின்போதுஏற்பட்ட மனக் கசப்புகளையும் தேர்தலுக்குப் பிறகு இருந்து வந்த காழ்புணர்சியையும் மறந்துவிட வேண்டுமென்றார்.தனது அரசியல் எதிர்ப் பாளர்களை புறக்கணிக்கும் நோக்கம் இல்லை என்றார். "ஒரே கொள்கையுடைய சகோதரர்களாகிய நாம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறோம். நாம் அனைவரும் குடியரசு வாதிகளே; நாம் அனைவரும் கூட்டாட்சிவாதிகளே" என்றார் (We have called by different names brethren of the same Principle. We are all Republicans; We are all Federalists) ஒவ்வொருவரும் நல்லெண்ணத் துடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யுடனும் செயல்பட வேண்டும் என்றார். அரசியலில் சகிப்புத்தன்மையைப் பின்பற்றி நாட்டின் வளங்களைப்பெருக்கவும்,நாட்டின் ஒருமைப் பாட்டைப் பேணவும்,குடியாட்சியைப் பயனுள்ளதாகச் செய்யவும் மக்கள்

ஒற்றுமை யுடன் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பதவி ஏற்ற பின் தனது வெளி உறவு அமைச்சராக திறமை மிக்கவரும், தனது இருபது ஆண்டுகால நெருங்கிய நண்பரு மான ஜேம்ஸ்மாடிசனை நியமித்தார். கருவூலச் செயலராக பென்சில்வேனி யாவைச் சேர்ந்த ஆல்பர்ட் கலாடின் (Albert Gallatin) என்பவரை நியமித்தார். மற்றும் உயர் பதவிகளில் கூட்டாட்சிக் கட்சியினருக்குச் சமமாக வரும் வரையில் பல குடி யரசுக் கட்சியினரை நியமித்தார்.

## ஜெபர்சனின் மக்களாட்சிக் கோட்பாடு : Jeffersonian Domocracy.

a) தனிமனித உரிமை : ஜெபர்சன் சாதாரண பொது மக்களில் ஒருவனான தனிமனிதனின் உரிமைகளில் பெருத்த நம்பிக்கை வைத்திருந்தார். தனிமனிதரின் உரிமைகளைப் பாதுகாப் பதற்கே அரசுகள் இருக்கின்றன. இந்த உரிமைகளை மீறும் அல்லது அழிக்க முயலும் எந்த அரசையும் தூக்கி எறிய மக்களுக்கு உரிமை உண்டு என்றார் ஜெபர்சன். தனிமனித உரிமையே ஜெபர்சனின் மக்களாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையாக அமைந்துள்ளது.

b) சமத்துவ உரிமை : மக்கள் அனைவரும் கடவுளால் சமமாகவேபடைக்கப்பட்டுள்ளனர்.எந்தவேறுபாடும் கிடை யாது. எனவே நாட்டை ஆளுவதற்கும் அனைவருக்கும் உரிமை உண்டு என்றார் ஹாமில்டனின் கொள்கையான சிறந்த சான் றோர்களினால் நடத்தப் படும் ஆட்சியே உயர்ந்தது என்பதை மறுத்தார்.

c) மாநில அரசுகளின் உரிமை : ஜெபர்சன் மாநில உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார். கூட்டாட்சி அரசு பொதுமக்களின் அன்றாட வாழ்வில் அதிகம் அளவில் தலையிடக் கூடாது என்றார். 'குறைந்த அளவு அதிகாரம் செய்யும் அரசே சிறந்த அரசு' என்றார். மேலும் கூட்டாட்சி அரசு அரசியலமைப்பில் கூறப்பட்ட வரைமுறைகளுக்கு உட்பட்டே செயல்படவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து குடியேற்றங்கள் எவ்வாறு பாதிக்கப் படாமல் நிற்க பாடுபட்டனவோ அவ்வளவு கூட்டாட்சி ஆதிக்கத்தி லிருந்தும் விலகி மாநிலங்கள் சுதந்திரமாக இயங்கப்பாடுபட வேண்டும் என்றார்.

d) எளிமையும் சிக்கனமும் : எளிமையும் சிக்கனமும் தனது அரசின்கொள்கைகளாகஇருக்கும்என்றுதனதுபதவியேற் புரையில்அறிவித்தார்ஜெபர்சன்.இவர்பதவியேற்றதோரணையே இந்த அரசியல் கொள்கைகளை வலியுறுத்தும் வகையில்

காணப்பட்டது. குடியரசுத்தலைவருக்குரிய ஆடம்பரங்களை வெறுத்தார். மேலும் சிக்கன பொருளாதார நிர்வாகத்தையே பெரிதும் விரும்பினார்.

e) படை பலக் குறைப்பு: ராணுவம் நிர்வாகத்துறைக்கு கட்டுப்பட்டு இயங்கவேண்டுமென்றார். போர் நடவடிக்கைகள் தவிர்க்கப்படவும் விரும்பினார். கடற்கரைக் காவலுக்கு வேண்டிய அளவுமட்டும் கடற்படை இருந்தால் போதும் என்றார். ஆனால் நடைமுறையில் இக்கொள்கைகளை அவர் செயல்படுத்த முடியவில்லை. வெளிநாடுகளில் நிலவிய குழப்ப நிலை, போர் அச்சம் இவைகளின் காரணமாக ராணுவத்தையும், கடற்படையையும் அதிக செலவில் வலுப்படுத்தினார் ஜெபர்சன்.

f) விவசாயத்திற்கு முக்கியத்துவம்: விவசாயம் பேணப்பட வேண்டும் என்பது ஜெபர்சனின் முக்கியக்கோட்பாடு ஆகும். விவசாய வாழ்வின் அடிப்படையிலான கிராமிய வாழ்வே சிறந்ததாக கருதினார். அரசியல் ஒழுக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் வேளாண்மை வாழ்வே துணை நிற்கும் என்றார். ஆலைத் தொழில் சார்ந்த முதலாளித்துவத்தை எதிர்த்தார்.

g) தடையில்லா வாணிபக் கோட்பாடு: ஜெபர்சன் காப்பு வரிகளை எதிர்த்தார். ஏனெனில் இது பெரும் தொழிலதிபர் களுக்கும், பெரும் வாணிபர்களுக்குமே ஆதாயம் அளிக்கக் கூடியதென்றார். தடையில்லா வாணிபக் கொள்கையின் மூலமே விவசாய உற்பத்திப் பொருட்களை உலகசந்தையில் விற்க முடியும் என்றார்.

h) வெளிநாட்டுறவில் அமைதி : ஜெபர்சன் பிரெஞ்சு ஆதரவுக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் குடியரசுத் தலைவராக பதவி யேற்ற பிறகு வாஷிங்டனின் கொள்கை களையே பின்பற்றினர். அனைத்து நாடுகளுடனும் சமாதானம், வாணிபஉறவு, நேர்மையான நட்புறவு ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுவோம் என்றார் ஜெபர்சன்.

ஜெபர்சனின் இந்த மக்களாட்சிக் கோட்பாடுகளை பெருவாரியான அமெரிக்க மக்கள் ஆதரித்தனர். தனது ஆட்சிக் காலம் முழுவதும் கூடிய மட்டும் இந்தகோட்பாடுகளின் அடிப்படையிலேயேசெயல்பட முற்பட்டார். ஆட்சிப் பொறுப் பேற்ற பின்பு உலகியல் அரசியலுக்கும் தத்துவரீதியான அரசி யலுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை உணர்ந்து தனது பதவிப் பொறுப்பிற்கு ஏற்ப தனது கொள்கைகள் சிலவற்றைத் தளர்த்திக் கொண்டார்.

காணப்பட்டது. குடியரசுத்தலைவருக்குரிய ஆடம்பரங்களை வெறுத்தார். மேலும் சிக்கன பொருளாதார நிர்வாகத்தையே பெரிதும் விரும்பினார்.

**e)** படைபலக் குறைப்பு: ராணுவம் நிர்வாகத்துறைக்கு கட்டுப்பட்டு இயங்கவேண்டுமென்றார். போர் நடவடிக்கைகள் தவிர்க்கப்படவும் விரும்பினார். கடற்கரைக் காவலுக்கு வேண்டிய அளவுமட்டும் கடற்படை இருந்தால் போதும் என்றார். ஆனால் நடைமுறையில் இக்கொள்கைகளை அவர் செயல்படுத்த முடியவில்லை. வெளிநாடுகளில் நிலவிய குழப்ப நிலை, போர் அச்சம் இவைகளின் காரணமாக ராணுவத்தையும், கடற்படையையும் அதிக செலவில் வலுப்படுத்தினார் ஜெபர்சன்.

**f)** விவசாயத்திற்கு முக்கியத்துவம்: விவசாயம் பேணப்பட வேண்டும் என்பது ஜெபர்சனின் முக்கியக்கோட்பாடு ஆகும். விவசாய வாழ்வின் அடிப்படையிலான கிராமிய வாழ்வே சிறந்ததாக கருதினார். அரசியல் ஒழுக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் வேளாண்மை வாழ்வே துணை நிற்கும் என்றார். ஆலைத் தொழில் சார்ந்த முதலாளித்துவத்தை எதிர்த்தார்.

**g)** தடையில்லா வாணிபக் கோட்பாடு: ஜெபர்சன் காப்பு வரிகளை எதிர்த்தார். ஏனெனில் இது பெரும் தொழிலதிபர் களுக்கும், பெரும் வாணிபர்களுக்குமே ஆதாயம் அளிக்கக் கூடியதென்றார். தடையில்லா வாணிபக் கொள்கையின் மூலமே விவசாய உற்பத்திப் பொருட்களை உலகசந்தையில் விற்க முடியும் என்றார்.

**h)** வெளிநாட்டுறவில் அமைதி : ஜெபர்சன் பிரெஞ்சு ஆதரவுக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் குடியரசுத் தலைவராக பதவி யேற்ற பிறகு வாஷிங்டனின் கொள்கை களையே பின்பற்றினர். அனைத்து நாடுகளுடனும் சமாதானம், வாணிபஉறவு, நேர்மையான நட்புறவு ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுவோம் என்றார் ஜெபர்சன்.

ஜெபர்சனின் இந்த மக்களாட்சிக் கோட்பாடுகளை பெருவாரியான அமெரிக்க மக்கள் ஆதரித்தனர். தனது ஆட்சிக் காலம் முழுவதும் கூடிய மட்டும் இந்தகோட்பாடுகளின் அடிப்படையிலேயேசெயல்படமுற்பட்டார். ஆட்சிப் பொறுப் பேற்ற பின்பு உலகியல் அரசியலுக்கும் தத்துவரீதியான அரசி யலுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை உணர்ந்து தனது பதவிப் பொறுப்பிற்கு ஏற்ப தனது கொள்கைகள் சிலவற்றைத் தளர்த்திக் கொண்டார்.

## ஜெபர்சனின் உள்நாட்டுக் கொள்கை

கூட்டாட்சிக் கட்சியினர் சில துறைகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளை சீர்செய்வதிலும் அதேசமயத்தில் மக்களுக்கு நன்மைபயக்கும்என்று கருதிய உருப்படியான கொள்கைகளைக் கடைப்பிடித்திலும் ஜெபர்சன் கவனம் செலுத்தினார். இவரது ஆட்சிக்காலம்அமெரிக்கவரலாற்றில்பலமுக்கிய நிகழ்ச்சிகளால் சிறப்பிடம் பெறுகிறது.

### 1) புதிய நியமனங்கள்:

ஆட்சியாளர்களின் கொள்கைகளை ஒத்துக் கொண்டு அந்தக் கொள்கைகளில் பற்றுதல் கொண்டவர்களே அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார் ஜெபர்சன். ஆடம்சின் நிர்வாகத்தில் உயர் பதவிகளில் இருந்த கூட்டாட்சிக் கட்சியினைச் சேர்ந்த அதிகாரிகளை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றினார். அந்தப் பதவிகளில் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான குடியரசுக் கட்சியினரை நியமித்தார். இவ்வாறு தம் பதவிக்காலம் முழுவதும் குடியரசுவாதிகளேயே நிர்வாகத்தில் நியமித்தார். ஆனால் இதன்மூலம் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியானது பதவிகளை தங்கள் கட்சியனருக்கு பங்கீடு செய்து கொள்ளும் வழக்கம் (Spoils System) தோன்றியது.

### 2) கூட்டாட்சி கட்சியினரின் நடவடிக்கைகள் சீர்செய்யப்படுதல்:

ஜெபர்சன் ஆட்சிப் பொறுப்பேற்றதும் கூட்டாட்சிக் கட்சியினர்மேற்கொண்ட பல நடவடிக்கைகளை மாற்றியமைத்தார். பல புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

a) குடியானவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக வாஷிங்டன் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வங்கி தீர்வையை ரத்து செய்தார். இதனால் வருமானத்தில ஏற்பட்ட குறையை ஈடுசெய்ய இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கவரி உயர்த் தப்பட்டது.

b) குடியரசுக்கட்சியினரை ஒடுக்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட குடி உரிமைச்சட்டம்திருத்தப்பட்டது. பதினான்கு ஆண்டுகளுக்குப்பதிலாகஐந்து ஆண்டுகள்குடியிருந் தாலே ஒருவருக்கு குடிஉரிமை அளிக்கப்படும் என்று இந்தத் திருத்தம் கூறியது. அந்நியர்சட்டமும்,தேசத்துரோகச் சட்டமும் புதுப்பிக்கப்படவில்லை. இந்த சட்டங்களின் படி தண்டனை பெற்றவர்களுக்கு ஜெபர்சனின் நிர்வாகம் மன்னிப்பு அளித்தது.

c) ஆடம்ஸ்காலத்தில்1801-ல்வருட நீதித்துறைச் சட்டத்தின் படி உருவாக்கப்பட்ட நள்ளிரவு நீதிபதி பதவிகளை ஒழிக்க முடிவு

செய்தார் ஜெபர்சன். எனவேகாங்கிரஸ்அந்த நீதித்துறைச் சட்டத்தைரத்துசெய்தது.அந்தசட்டத்தின்படி தோற்றுவிக்கப்பட்ட சர்கியுட் நீதிமன்றங்கள் கலைக்கப் பட்டன. நள்ளிரவு நீதிபதிகள் பெரும்பாலோர் பதவியிழந்தனர். இந்த நீதிபதிகள் தங்கள் ஆயுட்காலம் வரை பதவியில் இருக்க வேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் வாதம் நிராகரிக்கப் பட்டது. தேசத்துரோக சட்டத்தை மிகவும் கடுமையாக அமுல் படுத்திய கூட்டாட்சி கட்சி நீதிபதிகள் இருவரை விசாரணை செய்து நீக்குவதற்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நியு ஹாம்ஷயர், மாவட்ட நீதிமன்ற நீதிபதியானவில்லியம்பிக்கரிஸ்என்பவர் குடி போதை யில் இருந்த தாகக் கூறி பதவி நீக்கம் செய்யப்பட்டார். இவ்வாறு நடுநிசி நீதிபதிகளும், கூட்டாட்சி கட்சியைச் சேர்ந்த பல நீதிபதிகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

### 3) நிதிச் சீர்திருத்தம்

கூட்டாட்சிக் கட்சியினரின் ஆட்சியின் போது ஆடம்பரத்தின் காரணமாக நிர்வாகச் செலவுகள் அதிகரித்தது. இதனால் அரசின் பொதுக்கடன் அதிகரித்தது. ஜெபர்சன் பதவி ஏற்றபோது தேசக்கடன் 83 மில்லியன் டாலராக இருந்தது. கருவூலச் செயலரான ஆல்பர்ட் கலாடின் என்பவர் தனது முயற்சியின் மூலம் தேசக்கடனை குறைத்தார் செலவைக் குறைப் பதன் மூலம் பொதுக்கடனை குறைப்பதற்கு முயற்சிமேற் கொள்ளப்பட்டது. படையில் இருந்த பதவிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. எல்லா உள்நாட்டுவரிகளும் ரத்து செய்யப் பட்டன. நிலவிற்பனை, சுங்க வரிகள் மூலம் அரசாங்கத்தின் வருவாய் பெருக்கப்பட்டது. 1812-ம் வருடத்திற் குள்ளாக தேசக்கடன் 45 மில்லியன் டாலராக குறைக்கப்பட்டது.

### 4) நீதித்துறையுடன் மோதல்: மார்பரி VS மாடிசன் வழக்கு

ஆடம்ஸ் காலத்தில் இயற்றப்பட்ட நீதித்துறைச் சட்டம் ரத்து செய்யப்பட்டதால் பல நீதிபதிகள் பதவியிழந்தனர் என்றாலும் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஜான் மார்ஷல் அரசுக்கு எதிராக பல தீர்ப்புகள் வழங்கினார். அமெரிக்க வரலாற்றில் அழியாத புகழ்பெற்று விட்ட இத் தலைமை நீதிபதி விசாரித்த முதலாவது முக்கியமான வழக்கு மார்பரி எதிர் மாடிசன் ஆகும்.

தலைநகரான வாஷிங்டன் இருந்த கொலம்பியா மாவட்டத்தின் 'அமைதி நீதிபதியாக' வில்லியம் மார்பரி என்பவரை குடியரசுத் தலைவர் ஆடம்ஸ் நியமித்திருந்தார். அவரது நியமனம் செனட் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜெபர்சனின் ஆணையின் படி வெளிஉறவுச் செயலர்

மாடிசன் மார்பரியின் நியமன உத்தரவை வழங்க மறுத்தார். எனவே தனது நியமன உத்தரவை வழங்க உத்திரவிட வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனுக்கொடுத்தார். இதுவே மார்பரி vs மாடிசன் வழக்கு ஆகும்.

இந்த வழக்கை விசாரித்த மார்ஷல் வழங்கிய தீர்ப்பு புகழ்பெற்றது ஆகும். அந்தத் தீர்ப்பின்படி காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டங்களுக்கு முரணானதாக இருந்தால் தலைமை நீதிமன்றம் அதனை செல்லாது என்று சொல்லிதள்ளுபடி செய்யும் உரிமை உண்டு என்பது நிலை நாட்டப்பட்டது. இதுவே 'நீதிப்புனராய்வு' அதிகாரமாகும்.

## 5) ஒகியோ மாநிலம் சேர்த்துக் கொள்ளப்படுதல்

*1802*-ல் ஒகியோ மாநிலம் அமெரிக்க கூட்டாட்சியினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அந்த மாநிலம் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக இயற்றப்பட்ட சட்டத்தில் அந்த மாநிலத்திடமிருந்து இரண்டு உறுதிமொழிகள் பெறப்பட்டது. ஒவ்வொருநகரப்பகுதியிலும்ஒருபள்ளிக்கூடம் நிறுவப் படு வத-காக நிலங்கள் ஒதுக்கப்பட வேண்டும். ஓகியோ மாநிலத்தில் விற்கப்படும் அரசு நிலங்களின் வருவாயில் ஐந்து சதவீதம் சாலைகள் அமைக்கப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப் பட வேண்டும். இந்த நிபந்தனைகள் உள்நாட்டுச் சீரமைப்புக் கான வழிமுறைகளுக்கு வித்திட்டது எனலாம். ஆனால் மாநில உரிமைகள் பற்றி அதிகமாகப் பேசிய ஜெபர்சன் மாநில ஆட்சி முறையில் இவ்வாறு தலையிட்டது ஆச்சரியமானதாகும்.

## 6) லூசியானா விலைக்கு வாங்கப்படுதல் : Purchase of Lousiana

ஜெபர்சனின் ஆட்சிக்காலத்தில் லூசியானா என்ற பெரிய நிலப்பரப்பு பிரான்சிடமிருந்து வாங்கப்பட்டது ஒரு முக்கிய நிகழ்ச்சி யாகும். மிசிசிப்பி நதிக்கு மேற்கே உள்ள இந்த பரந்த பிரதேசம் பிரெஞ்சுக்காரர்களின் குடியேற்றமாக விளங்கியது. இந்த பிரதேசம் ஏழாண்டுப் போரின் முடிவில் பிரான்சால் ஸ்பெயினுக்கு வழங்கப் பட்டது. நெப்போலியன் *1800*-ல் இப்பகுதியை வலுவிழந்திருந்த ஸ்பெயினுடன் சான் இல்டி பன்சோ (San Ildefenso) என்ற ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு திரும்ப பெற்றுக் கொண்டார்.

நெப்போலியன் லூசியானாவைத் திரும்பப் பெற்றுக் கொண்ட செய்தியும், அமெரிக்காவில் ஒரு பிரெஞ்சுப் பேரரசை அமைக்க எண்ணம் கொண்டுள்ளார் என்ற செய்தியும் *1802*-ல்அமெரிக்கர்களுக்குஎட்டியது.இதையறிந்த அமெரிக் கர்கள் அதிர்ச்சியடைந்தனர். லூசியானா பகுதியிலுள்ள நியு ஆர்லியன்ஸ்

துறைமுகம் வழியாகவே ஓகியோ, டென்னசி பகுதிகளில் விளையும் விளைப்பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும். எனவே இப்பகுதியில் பிரெஞ்சுக் காரர் ஆதிக்கம் பெற்றால் அது அமெரிக்கர்களின் முன்னேற்றத்திற்கு பெருந்தடையாக அமையும் என்று கருதினார் ஜெபர்சன்.

லூசியானாவைக் கைப்பற்ற திட்டங்கள் வகுக்கப்பட்டது. நியு ஆர்லியன்ஸ் துறைமுகத்தை பிரான்ஸ் கைப்பற்ற நினைத்தால் பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்துடன் கூட்டுச் சேரும் என்று தெரிவித்தார் ஜெபர்சன். இதனை பிரான்சிலிருந்த அமெரிக்கத் தூதர் ராபர்ட் லிவிங்ஸ்டன் என்பவருக்கும் தெரிவித்தார். அதே சமயம் நியு ஆர்லியன்ஸ் பகுதியையும், கீழ் மிசிசிப்பி பகுதியையும் விலைக்கு வாங்க நெப்போலியனுடன் பேச்சுவார்த்தை நடத்த லிவிங்ஸ்டனுக்கு உதவியாக தனது தூதுவராக ஜேம்ஸ் மன்றோ என்பவரை 1803-ஜனவரியில் பாரிசு அனுப்பினார்.

இதற்கிடையில் நெப்போலியன் தனது திட்டப்படி செயல்பட்டார். ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கு எதிராக போர் ஆரம்பித்தால் நியு ஆர்லியன்ஸ் பகுதியை இங்கிலாந்துக் கப்பற்படை எளிதாகக் கைப்பற்றிவிடும் என்று நினைத்தார். மேலும் பல்லாயிரக்கணக்கான மைல் தூரமுள்ள லூசியானாவுக்கு பாதுகாப்பான கடல் வழி அமைக்க முடியாது என்பதையும் அறிவார். அத்துடன் இங்கிலாந்துக்கெதிரான போர் நடவடிக்கைகள் எடுக்க நெப்போலியனுக்கு பணம் தேவைப்பட்டது.

எனவே மேற்கு புளோரிடாவையும், நியு ஆர்லியன்சை மட்டும் பத்துமில்லியன் டாலருக்கு விலைபேச வந்த அமெரிக்க தூதுவர்களிடம், நெப்போலியனின் நிதிமந்திரி பார்பே மார்போஸ்(BarbeMarbos)என்பவர் லுசியானாபகுதி முழுவதையும் 15 மில்லியன் டாலருக்கு விற்க முன்வந்தார். ஆச்சரியம் அடைந்த அமெரிக்கதூதுவர்கள் இதனைஉடனடியாகஏற்றுக் கொண்டார். 1803,ஏப்ரல்30-ல்உடன்படிக்கை கையெழுத் தானது. இதன்படி 11,250,000 டாலர் ரொக்கமாகவும், 3,75,000 டாலர் பிரெஞ்அரசுஅமெரிக்கர்களுக்குவழங்கவேண்டிய இழப்பீடாகவும் கொடுக்கவேண்டும். இதன்படி ஒன்பது லட்சம் சதுர மைல் பரப்பளவு உள்ள லூசியானா அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பரப்பு இரட்டிப்பாகியது. ஜெபர்சனின் புகழ் உயர்ந்தது.

## 7) ஆரன்பர் சதிவழக்கு

1804-ம் வருடம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜெபர்சனும், காங்கிரசுக்கு நடைபெற்ற தேர்தல்களில் குடியரசுக்

கட்சியனரும் அமோக வெற்றி பெற்றனர். இதனைக் கண்ட கூட்டாட்சி கட்சியினர் விரக்தி அடைந்தனர். பொறாமை கொண்டனர். வட பகுதியில் இருந்த புதிய இங்கிலாந்து மாநிலங்களில் கூட்டாட்சி கட்சியினர் கூடுதல் செல்வாக்குப் பெற்று விளங்கினர். எனவே 'வட மாநிலங்களின் கூட்டமைப்பு' (Northern Confederacy) ஒன்றை உருவாக்கி அமெரிக்க கூட்டாட்சியிலிருந்து பிரிந்து போகத் திட்டமிட்டனர்.

1804-ம் வருட தேர்தலில் ஆரன்பர் (Aaren Bur) துணைக் குடியரசுத் தலைவராக நிறுத்தப்படாததால் ஜெபர்சனின் மீது வெறுப்புற்றார். இதனைப் பயன்படுத்திக் கொண்ட கூட்டாட்சி கட்சியினர் அவரை நியுயார்க் நகர ஆளுநர் பதவிக்கு போட்டியிட வைத்தனர். ஆனால் இவரை ஹாமில்டன் கடுமையாக எதிர்த்து பிரசாரம் செய்தார். ஏற்கனவே நெடுநாட்களாகவே ஆரன்பர்க்கிற்கும் ஹாமில்டனுக்கும் பகைமை இருந்து வந்தது. தனது தோல்விக்கு ஹாமில்டனே காரணம் என்று கூறி அவரைத் தனிச் சண்டைக்கு அழைத்துக் கொன்று விட்டார். உடனே அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதனால் மனமுடைந்த பர் லூசியானா பிரதேசம் சென்றார். அங்கிருந்த ஆளுநர் ஜேம்ஸ்வில்க்சின்சனுடன் சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார். அப்பிரதேசத்தை அமெரிக்காவிலிருந்து பிரிக்க சதி செய்கிறார் என்ற வதந்தி பரவியது. எனவே பர் மற்றும் அவரது ஆதரவாளர்களைக் கைது செய்து ரிச்மாண்ட் என்ற இடத்தில் விசாரணை செய்ய ஏற்பாடு செய்தார் ஜெபர்சன். வழக்கை விசாரித்த ஜான் மார்ஷல் பர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில்ஆதாரம்இல்லை என்று விடுதலை செய்தார்.இந்தவழக்கு அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்திய வழக்காகும்.

## ஜெபர்சனின் வெளிஉறவுக் கொள்கை

ஜெபர்சனின் இரண்டாவது பதவிக்காலத்தில் (1804-1808) வெளிநாட்டுறவில்சிக்கல்ஏற்பட்டது.இது பல பிரச்சனைகளைத் தோற்றுவித்தது.ஆனால்ஜெபர்சன்வாஷிங்டனின் கொள்கையைப் பின்பற்றினார். வளர்ந்து வரும் அமெரிக்காவுக்கு போர்இல்லாதவாழ்க்கை தேவை என்று உணர்ந்து கொண்டார். ஆனாலும் இவர்பலநடவடிக்கைகள்மேற்கொள்ள வேண்டியதிருந்தது.

## 1) வட ஆப்பிரிக்க கடற்கொள்ளைக்காரர்களை அடக்குதல்

வட ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜியர்ஸ்,

திரிபோலி, டூனிஸ் ஆகிய நாடுகளைச் சார்ந்த கடற்கொள்ளைக் காரர் தங்கள் பகுதி வழியாகச் செல்லும் கப்பல்களைக் கொள்ளையிட்டும், மாலுமிகளைக் கைது செய்தும் வந்தனர். மற்ற நாடுகளைப் போலவே அமெரிக்காவும் திறை செலுத்தி தனது கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. திரிப்போலி பாஷா அதிக கப்பம் செலுத்த வேண்டும் என்று கேட்டபோது ஜெபர்சன் மறுத்தார். இதனால் திரிபோலி அமெரிக்காமீது போர் தொடுத்தது. 1803-லிருந்து 1805-வரை நடைபெற்ற போர்களில் பாஷாவின் கப்பற்படை தோற்கடிக்கப் பட்டது. மற்ற நாடுகளும் பணிந்தன. இவ்வாறு மத்திய தரைக் கடலில் அமெரிக்கக் கப்பல்கள் பெற்ற வெற்றி அமெரிக்காவின் மதிப்பை உயர்த்தியது.

## 2) ஜெபர்சனும் இங்கிலாந்தும்

### a) செசாபீக் சம்பவம்

ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 1803ல் மீண்டும் போர் ஏற்பட்டது. இந்தப் போரினால் நடுநிலை வகிக்கும் நாடுகளின் கடற்போக்குவரத்து உரிமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இங்கிலாந்தை பொருளாதார ரீதியாக நசுக்க 'கண்ட திட்டத்தை' அறிவித்தார் நெப்போலியன். இங்கிலாந்தும் அதற்கு எதிரான ஆணைகளை வெளியிட்டது. பிரான்சுக்கு எந்த உதவியும் கிடைக்காமல் செய்யும் பொருட்டு ஐரோப்பியக் கடற்கரையை இங்கிலாந்து முற்றுகையிட்டது. அமெரிக்கா போன்ற நடுநிலைநாடுகளின் கப்பல்கள் இங்கிலாந்து வழியாகவே ஐரோப்பாவுடன் வியாபாரம் செய்ய வேண்டுமென்று கட்டளை இட்டது. அமெரிக்க கப்பல்களை சோதிக்கவும், அவற்றில் பிரிட்டிஷ் குடிமக்கள் இருந்தால் அவர்களைப் பிடித்துச் செல்ல தங்களுக்கு உரிமை உண்டு என்று கூறியது.

இதனால் அமெரிக்க கடல் வாணிகத்திற்கு அதிக இழப்பு ஏற்பட்டது. இதனை ஜெபர்சன் வன்மையாக ஆட்சேபித்தார்.1807-ல் இங்கிலாந்து போர்க்கப்பல் ஒன்று 'செசாபீக்' என்ற அமெரிக்கப் போர்கப்பல் மீது சுட்டு சேதப் படுத்தியது. இதில் மூன்று அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். பின்னர் அந்தக் கப்பலில் ஏறி சோதனை செய்து நான்கு மாலுமிகளை இழுத்துச் சென்றனர். இதனால் இங்கிலாந்து மீது போர் தொடுக்க வேண்டுமென்று அமெரிக்காவில் கோரிக்கை எழுந்தது. இதுவே செசாபீக் சம்பவம் ஆகும்.

### b) ஜெபர்சனின் எதிர் நடவடிக்கைகள்

ஆனால் ஜெபர்சன் போர் செய்வதை விரும்பவில்லை.

அவர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க இறக்குமதி மறுப்புச் சட்டம் (Non -Importation Act) ஒன்றை காங்கிரஸ் இயற்றியது. இதன்படி மற்ற நாடுகளிலிருந்து கிடைக்கும் எந்தப்பொருட்களையும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. ஆனால் இந்தச் சட்டம் எதிர்பார்த்த பயன் கொடுக்கவில்லை. இதனால் 1807-ல் 'வாணிபத் தடைச் சட்டம்' (Embargo Act) இயற்றப்பட்டது. அமெரிக்கக் கப்பல்கள் அந்நிய நாடுகளுக்குச் செல்லக்கூடாதுஎன்று இதுதடைசெய்தது. ஆனால் இச் சட்டத் தினால் அமெரிக் கவணிகர்களும்,முதலாளிகளும் பாதிக்கப்பட்டனர். ஆனால் இச்சட்டங்களினால்ஜெபர்சன் எதிர்பார்த்த விளைவு ஏற்படவில்லை.இங்கிலாந்துமற்றும் பிரெஞ் சுக்கப் பல்கள் அமெரிக்கக் கப்பல்களை சோதனை செய்வது மட்டும் நிற்கவே இல்லை. ஆனால் ஜெபர்சனின் இந்த அயல்நாட்டுக் கொள்கையால் போரில்அமெரிக்காஈடுபடாமல் தடுக்கப் பட்டது. பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் 1809-மார்ச்சில் வாணிபத் தடைச் சட்டத்தை ரத்து செய்தார்.

## ஜெபர்சனைப் பற்றிய மதிப்பீடு

ஜெபர்சன் தனது முதலாவது பதவிக்காலத்தில் பின்பற்றிய சிறந்த உள்நாட்டுக் கொள்கையினால் மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றிருந்தார். ஆனால் அவரது இரண்டாவது ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுறவில் ஏற்பட்ட நெருக்கடியினால் மக்களின் மதிப்பை ஓரளவு இழந்துவிட்டார். இவர் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்குமிடையே ஏற்பட்ட போரில் நடுநிலைவகித்தது, நாட்டை கட்டிக் காக்கவும், எல்லைகளை வலுப்படுத்தவும் அமெரிக்காவுக்கு உதவியது. ஜெபர்சன் மூன்றாம் முறையும் குடியரசுத்தலைவர் பதவிக்கு நிற்க மறுத்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற பின்பு பதினேழு ஆண்டுகள் வாழ்ந்தார் ஜெபர்சன். அப்போது கிறிஸ்துவ சமயக் கோட்பாடுகளைப் பற்றியும்,இந்தியர்களின் மொழிகளை ஆராய்வதிலும்காலத்தைச் செலவிட்டார். இவரது முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டதே வர்ஜினியா பல்கலைக் கழகம் ஆகும். 1826, ஜுலை 4-ம் தேதி இறந்தார் ஜெபர்சன். அவரது கல்லறையில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் : "சுதந்திர அறிக்கையின் ஆசிரியர் ; வர்ஜினியாவின் சமய சுதந்திரத்திற்கு உழைத்தவர் ; வர்ஜினியா பல்கலைக் கழகத்தைநிறுவியவர்.

# 11. 1812-ம் ஆண்டுப் போர்
## (War of 1812)

ஜெபர்சனுக்குப் பிறகு ஜேம்ஸ் மாடிசன் என்பவர் 1809-ல் அமெரிக்க குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார். இவர் 1817 வரை எட்டு ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார். இவர் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி 1812-ம் ஆண்டுப் போராகும். இது ஆங்கிலேயர்கள் மீது அமெரிக்கர்கள் தொடுத்த போர் ஆகும். இந்தப் போரின்மூலம் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தீர்க்கப்படாமல் இருந்த பல பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. இப்போர் மாடிசனின் போர் என்றும், இரண்டாவது விடுதலைப் போர் என்றும் அழைக்கப்படுகிறது.

### போருக்கான காரணங்கள்

### 1) நடுநிலை நாடுகளின் உரிமை மீறப்படுதல்

ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்குமிடையே நெப்போலியன் காலத்தில் நடைபெற்ற போர்களில் அமெரிக்கா நடுநிலை வகித்தது. ஆனால் அமெரிக்காவின் நடுநிலை உரிமைகளை இங்கிலாந்து மதித்து நடக்கவில்லை. பலமுறை மீறியது. இதுவே இந்தப் போருக்கு அடிப்படை காரணமாகும்.

நெப்போலியன் பெர்லின், மிலான் ஆணைகளை வெளியிட்டு எந்த நாடும் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக் கூடாது என்று தடைவிதித்தார். இங்கிலாந்தும் 'கவுன்சில் உத்திரவுகளை வெளியிட்டு' அமெரிக்கா போன்ற நடுநிலை நாடுகள் பிரான்சுடன் வாணிபம் செய்யக் கூடாது என்று தடைவிதித்தது. இதனால் அமெரிக்காவின் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

### 2) அமெரிக்க கப்பல்களிலிருந்து மாலுமிகளை இங்கிலாந்து கவர்ந்து செல்லுதல்

ஆங்கிலக் கப்பற்படையிலும் வாணிகக் கப்பல்களிலும் மாலுமிகளுக்கும், தொழிலாளர் களுக்கும் உரிய ஊதியமும், வசதியும் இல்லை. ஆனால் அமெரிக்க கப்பல் படையிலும், வாணிகக் கப்பல்களிலும் இத்தகைய வசதிகள் கிடைத்தது. இதனால் சந்தர்ப்பம் கிடைத்த போது ஆங்கிலக் கப்பல்களில் வேலைப்பார்த்த மாலுமிகள் அமெரிக்க கப்பல்களில் வேலைக்கு சென்றுவிட்டனர். இதனால் இங்கிலாந்துக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

எனவே இங்கிலாந்து கப்பல்கள் அமெரிக்க வாணிகக் கப்பல் களை நடுக்கடலில் தடுத்து நிறுத்தி, சோதனை செய்தது. அவற்றில் இங்கிலாந்து மாலுமிகளும், கப்பல் தொழிலாளர் களும் இருந்தால் அவர்களை மீட்டுக் கொண்டு சென்றது. இதனால் கப்பல் வாணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மேலும் உரிமைவேட்கை உள்ள அமெரிக்கர்கள் இங்கிலாந்தின் இந்த செய்கைகளை எதிர்த்தனர்.

### 3) அமெரிக்கக் கப்பல் தாக்கப்படுதலும், எதிர் நடவடிக்கையும்: (செசாபீக் சம்பவம்)

அமெரிக்காவின் நடுநிலை உரிமையை சிறிதும் மதிக்காத இங்கிலாந்து 1807-ல் செசாபீக் வளைகுடாவிலுள்ள ஹென்றி முனை (Capl Henry) என்ற இடத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்ற அமெரிக்க கப்பற்படையைச் சார்ந்த 'செசாபீக்' என்ற கப்பலை சோதனையிட முயன்றது. இங்கிலாந்து கப்பலான லியோபோர்ட் இந்த நடவடிக்கை யில் இறங்கியது. அப்பகுதியில் அமெரிக்க கப்பல் படைத்தலைவர் ஜேம்ஸ்பாரன் (James Baran) செசாபீக் கப்பலை சோதனை போடுவதற்கு மறுப்பு தெரிவித்தார். இதனால் லியோபோர்ட் கப்பல் சுட ஆரம்பித்தது. இதில் மூன்று அமெரிக்கர்கள் இறந்தனர். பல மாலுமிகள் இங்கிலாந்து கப்பற்படையினரால் கவர்ந்து செல்லப் பட்டனர். இச்செயல்அமெரிக்காவின்மதிப்பைக்களங்கப்படுத்தி விட்ட தாகக் கருதப்பட்டது. எனவே இங்கிலாந்துடன் போர் புரிய துணிந்தனர் அமெரிக்கர்.

1811-ல் மே மாதம் 'பிரசிடென்ட்' என்ற அமெரிக்க போர்க் கப்பல் இங்கிலாந்துக் கப்பலான 'லிட்டில் பெல்ட்' என்ற கப்பலைத் தாக்கி எண்பது பேரை கொன்றது. இவ்வாறு ஆத்திர மூட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றதால் அமெரிக்காவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே நல்லுறவு சீர்குலைந்து பகைமை வளர்ந்தது. இந்த நிலை 1812-ம் வருடப் போர் ஏற்பட வழி வகுத்தது.

### 4) அமெரிக்காவின் எதிர் நடவடிக்கைகள்

இங்கிலாந்துக் கப்பல்களை விட்டு ஓடிப்போன மாலுமி களைத் தேடுவதற்காக அமெரிக்கக்கப்பல்களைச் சோதனை போடும் உரிமை இங்கிலாந்துக்கு உண்டு என்று வலியுறுத்தப் பட்டது. இதனை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பாக பல நடவடிக்கைகளை ஜெபர்சன் மேற்கொண்டார்.

a) 1807-ல் ஜெபர்சன் வாணிகத்தடைச் சட்டம் (Embargo Act) ஒன்றை இயற்றினார். இதன்படி ஐரோப்பாவுடன் அமெரிக்க

வாணிபம் நிறுத்தப்பட்டது. இதன் மூலம் இங்கிலாந்தும், பிரான்சும் அமெரிக்கப் பொருட்களை பெறமுடியாமல்போனது. ஆனால் பாதிக்கப்பட்டது அமெரிக்காதான். அமெரிக்கப் பொருட்கள் வெளிச்சந்தைகளுக்குப் போக முடியாததால், இச் சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே இது பின்னர் ரத்து செய்யப்பட்டது.

b) *1808*-ல் உறவின்மைச் சட்டம் (**Non-Intercouse Act**) இயற்றப்பட்டு, இதன்படி இங்கிலாந்து, பிரான்ஸ் தவிர பிற நாடுகள் மீதான வாணிபத் தடை அகற்றப்பட்டது.

c) *1810*-ல் நாதானியேல் மெகான் என்பவர் ஒரு மசோதா கொண்டு வந்தார். இதற்கு **Macon Bill No 2** என்று பெயர். இதன்படி இங்கிலாந்தும், பிரான்சும் வாணிபத்தடையை அகற்றினால் அமெரிக்காவும் வாணிபத் தடையை நீக்கி வாணிப உறவை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட பிரான்ஸ் பெர்லின், மிலான் ஆணைகளைநிறுத்திவைப்பதாகஅறிவித்தது.இதனால் பிரான் சுடன் மட்டும் வர்த்தக உறவு புதுப்பிக்கப்பட்டது. எனவே இங்கிலாந்து அமெரிக்கா மீது ஆத்திரம் கொண்டது.

### 5) செவ்விந்தியர்களுக்கு ஆங்கிலேயரின் உதவி:

கனடாவிலிருந்த ஆங்கிலேயர்கள் செவ்விந்தியர்களுடன் மயிர்த்தோல் (**Fur**) வாணிபம் செய்து வந்தனர். அத்துடன் அவர்களுக்கு துப்பாக்கிகளையும் கொடுத்து வந்தனர். ஏனென்றால் அமெரிக்கா முழுவதும் ஆங்கில எதிர்ப்பு காணப்பட்டதால் போர் வரும் என்றும், அத்துடன் கனடா மீது படையெடுப்பும் நிகழும் என்றும் கருதினர். எனவே கனடாவின் கவர்னர் ஜெனரல் சர் ஜேம்ஸ் கிரேக் (**James Craig**) செவ்விந்தியர் களுக்குமேலும் படை உதவி செய்தார். அவர்களைக் கனடாவின் படைகளில் சேர்த்துக் கொண்டனர்: இதனால் கனடாவையும் கைப்பற்றவேண்டுமென்றுஅமெரிக்காவில்பிரச்சாரம் செய்யப் பட்டது. கனடாவை வெல்வது எளிது என்றும் அமெரிக்கா கண்டம் முழுவதும் தங்களுக்கே உரியது என்றும் அமெரிக்கர் முழங்கலாயினர்.

### 6) தெக்கும் சேயின் எழுச்சி

இந்தியப் பழங்குடியினர் பல குடும்பங்களாக தனித் தனியே வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஷாவ்நஸ் (**Shawnes**) என்ற இனமக்களின் தலைவர் தெக்கும்சே (**Tecumseh**) என்பவர் ஆவார். அமெரிக்க வரலாற்றில் புகழ்பெற்ற இந்தியர் இவர் ஆவார். இவர்தான் முதன் முதலாக பழங்குடி இனத்தவரை எல்லாம்

ஒன்று சேர்த்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தி அமெரிக்கர்கள் மேற்கு நோக்கி முன்னேறுவதைத் தடுக்க திட்டம் தீட்டினார். செவ்விந்தியர் நாட்டிற்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் ஓகியோ ஆறு எல்லையாக அமைக்க முயற்சி மேற்கொண்டார். வாபாஷ் (Wabash) நதிக்கரையில் திப்பகேனோ (Tippecanoe) என்ற நகரைத் தலைநகரமாக அமைத்தார். தங்கள் இருப்பிடத்தை விட்டு பழங்குடி மக்கள் நகர முடியாது என்று தெரிவித்தார்.

## 7) செவ்விந்தியர் மீது அமெரிக்கரின் தாக்குதல்கள்

தெக்கும்சேயிக்கும், இந்தியப் பழங்குடியினருக்கும் இங்கிலாந்து கனடா வழியாக அமெரிக்காவுக்கு எதிராக உதவுவதாகவும், இந்தியர்கள் ஒரு தனிஅரசை அமைக்க ஊக்குவிப்பதாகவும் தெரிய வந்தது. இதனைக் கேள்விப்பட்ட அமெரிக்கர் அஞ்சினர். எனவே 1811, நவம்பர் 7-ல் இந்தியானாவின் கவர்னர் வில்லியம் ஹென்றி ஹாரிசன் என்பவர் ஆயிரம் வீரர்களுடன் சென்று செவ்விந்தியர்களைத் தாக்கினார். திப்பகேனோ நகர் தீக்கிரையாக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு போர்ட் பிம்ஸ் (Fort Phimms) என்ற இடத்தை பழங்குடியினர் பிடித்துக் கொண்டனர். ஆனால் தளபதி ஆன்ரு ஜாக்சன் தலைமையில் ஒருபடைஅமைக்கப்பட்டுபழங்குடியினர்கொன்று குவிக்கப் பட்டது.

## 8) புளோரிடாவை கைப்பற்ற அமெரிக்கர்களின் ஆசை

தங்கள் பகைவர்களான இந்தியர்களுக்கும், தப்பித்துச் செல்லும் நீக்ரோ அடிமைகளுக்கும் புளோரிடா புகலிடமாக விளங்குகிறது என்று அமெரிக்கர் குற்றம் சாட்டினர். எனவே புளோரிடப் பகுதியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. ஏற்கனவே இப்பகுதியில் பல அமெரிக்கர்கள் குடியமர்ந் திருந்தனர். புளோரிடாவிலுள்ள அலபாமா, அப்பலாச்சிகோலா போன்ற ஆறுகள் மூலம் உலகின் எப்பகுதிக்கும் கடல் வாணிபத்திற்கு செல்லும் வாய்ப்பும் வசதியுடன் இருந்தன.

1810-ல் மேற்கு புளோரிடாவிலுள்ள அமெரிக்கர்கள் பாதன் ரோஸ் (Baton Rouse) என்ற ஸ்பானியக் கோட்டையைப் பிடித்துக் கொண்டனர். இப்பகுதியை அமெரிக்காவுடன் இணைக்கவேண்டுமென்றுகூறினர். உடனேமாடிசன் இப்பகு திகளை அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைத்தார்.

புளோரிடாவின் கிழக்குப் பகுதியையும் இணைக்க மாடிசன் திட்டமிட்டார். அவரது ரகசிய சம்மதத்துடன் கிழக்கு புளோரிடாவில் ஜார்ஜியாவின் முன்னாள் கவர்னர் ஜார்ஜ் மாத்யூஸ் 1811-ல் ஒரு கலகத்தை மூட்ட திட்டமிட்டார்.

இத்திட்டத்தை அறிந்த ஸ்பெயின் மாடிசனுக்கு கண்டனம் தெரிவித்தது. ஸ்பெயின் அப்போது இங்கிலாந்தில் கூட்டாளியாகஇருந்ததால்புளோரிடா முழுவதையும்இணைக்க வேண்டுமானால் இங்கிலாந்துடன் போர் தொடுப்பது தான் ஒரே வழி என்று அமெரிக்கர் முடிவு செய்தனர்.

## 9) போர்ப்பருந்துகள் : (War Hawks)

1811-ல் காங்கிரசுக்கு நடைபெற்ற தேர்தலில் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலிருந்து புதிய எழுச்சி மிக்க, போர் ஆசை கொண்ட இளைஞர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் முக்கியமான தலைவர்கள் வர்ஜினியாவைச் சேர்ந்த 34 ராலினாவைச் சார்ந்த 29 வயது நிரம்பிய அழகான தோற்றம் உடைய ஜான்கால்ஹுன் (John Calhoun) ஆகியோர் ஆவர்.

ஹென்றி கிளே பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ராணுவக் கமிட்டித் தலைவராக கால்கூனை நியமித்தார். இவர்கள் காங்கிரசில் போரை ஆதரித்து பலமாக வாதிட்டனர். இவர்கள் தீவிர தேசியவாதிகளாகவும் கருதப்பட்டனர். அப்போது காங்கிரசில் முக்கிய உறுப்பினராக இருந்த ஜாண் ரண்டால்ப் இவர்களை 'போர்ப் பருந்துகள்' என்று வர்ணித்தார். போர்ப் பருந்துகளில் மேலும் முக்கியமான தலைவர்கள் ரிச்சர்ட் ஜான்சன், பெலிக்ஸ், வில்லியம் லெண்ட்ஸ், சரண்டி, பீட்டர் போரிட்டர் ஆகியோர் ஆவர்.

இந்தப் போர்ப் பருந்துகள் வாதத்திறமையும் நிர்வாக அனுபவமும் பெற்றவர்கள். இவர்கள், இங்கிலாந்துடன் போர் செய்து அப்போரில் வெற்றியடைந்தால் அந்த வெற்றியின் மூலம் கடல் முற்றுகையை அகற்றிவிட முடியுமென்றும், கனடாவையும் இங்கிலாந்திடம்இருந்துகைப்பற்றிசெவ்விந்தியர் பிரச்சனையையும் தீர்த்து விடலாம் என்றும் கருதினர்.

## 10) இங்கிலாந்து மீது போர்ப்பிரகடனம்

குடியரசுத் தலைவர் மாடிசனும் இங்கிலாந்தின் மீது போர் தேவை என்ற முடிவைக் கொண்டிருந்தார். 1812-ஏப்ரலில் தனது கவுன்சில் உத்தரவுகளை ரத்து செய்ய முடியாது என்று இங்கிலாந்து அறிவித்துவிட்டது. இந்நிலையில் ஜுன் மாதம் முதல் நாள் அன்று காங்கிரசுக்கு தனது போர்ச்செய்தியை (War Message) அனுப்பினார் மாடிசன்.

தனது போர்ச் செய்தியில் "அமெரிக்க மாலுமிகளைக் கடத்திச் சென்று ஆங்கிலக்கப்பற்படையில் சேர்ப்பதாகவும், அமெரிக்காவின் வணிகச் செயல்முறைகளில் தலையிடுவ

தாகவும், செவ்விந்தியர்களை அமெரிக்காவுக்கு எதிராகத் தூண்டுவதாகவும்" இங்கிலாந்து மீது குற்றம் சாட்டினார். இதன் மூலம் இங்கிலாந்து ஏற்கனவே அமெரிக்கா மீது போர் தொடுத்துவிட்டது என்றும் குற்றம்சாட்டினார். எனவே இங்கிலாந்து மீது போர் பிரகடனம் செய்யுமாறு காங்கிரசுக்கு பரிந்துரை செய்தார்.

இதனை ஏற்றுக் கொண்டு 1812, ஜுன் 18-ல் இங்கிலாந்து மீது அமெரிக்க காங்கிரஸ் போர்ப் பிரகடனம் செய்தது. ஆனால் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஜுன் 16-ல் இங்கிலாந்து தலைமைஷ அமைச்சர் காசில்ரிபிரபு கவுன்சில் உத்தரவுகளை ரத்து செய்வதாக அறிவித்தார். ஆனால் அந்த செய்தியை அறியாத அமெரிக்கா போர்ப் பிரகடனம் செய்து விட்டது.

## போரின் போக்கு

இங்கிலாந்துடன் போர் வேண்டும் என்பது குறித்து அமெரிக்க மக்களிடையே கருத்து வேற்றுமை நிலவியது. போர்ப் பிரகடனம் கூட செனட் சபையில் 19க்கு 13 என்ற விகிதத்திலும், பிரதிநிதிகள் சபையில் 79க்கு 49 என்ற விகிதத்திலேயும் தான் ஆதரவு அமைந்திருந்தது. மேலும் அமெரிக்காவானது ஒரு போருக்கு தயாராக இருக்கவில்லை. போருக்கு வேண்டிய நிதியும் தேவையான அளவு ஆயுதங்களும் அமெரிக் காவிடம் இல்லை. படை வலிமையை அதிகரிக்க எவ்விதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. போதிய முயற்சி பெறாத தகுதியற்ற படைத் தலைவர்களே அமெரிக்கா விடம் இருந்தனர். மேலும் இங்கிலாந்தும் நெப்போலியனுடன் போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் அதுவும் ஆயத்தமாக இல்லை. ஆனாலும் போர் ஆரம்பமானது. இப்போர் 1812 லிருந்து 1814 வரை நடைபெற்றது.

## கனடா மீது தாக்குதல்

போரின் ஆரம்பத்தில் அமெரிக்கர்கள் கனடாவின் மீது மும்முனைத் தாக்குதல் தொடுத்தனர். டெட்ராய்ட் வழியாகவும், நயாகரா நீர்வீழ்ச்சி வழியாகவும் சேம்பிளைன் ஏரி வழியாகவும் கனடாவைத் தாக்க திட்டம் தீட்டப்பட்டது. மான்ட்ரிலைக் கைப்பற்றுவது முதல் திட்டமாக இருந்தது. ஆனால் கொள்கை அளவில் இத்திட்டம் சிறந்ததாக இருந்தாலும் அனுபவக் குறைவால் அமெரிக்கர்களால் இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை. அமெரிக்கர்கள் மாண்ட்ரிலை கைப் பற்றுவதற்குப் பதிலாக, ஆங்கிலேயர்கள் 1812 ஆகஸ்டில் டெட்ராய்ட் (Detroit) நகரைக் கைப்பற்றினர். டெட்ராய்ட்டின் ஜெனரல் போரில்

ஹல் என்பவர் சரணடைந்தார்.

## கடற்போரில் அமெரிக்கர்களின் வெற்றி

தரையில் நடைபெற்ற போரில் அமெரிக்கர் படுதோல்வி அடைந்தாலும் மாடிசனும் அவர் ஆதரவாளர்களும் கடற் போரில் கிடைத்த வெற்றி குறித்து மகிழ்ச்சி அடைந்தனர். அமெரிக்கக் கப்பற்படை சில வியத்தகு வெற்றிகள் பெற்றது. கான்ஸ்டிடியூசன் (Constitution) என்ற அமெரிக்கக் கப்பல் கூரியர் (Guerriere) என்ற ஆங்கிலக் கப்பலை 1812 ஆகஸ்ட் 19-ல் அழித்தது. வாஸ்ப் (Wasp) என்ற கப்பல் பிரோலிக் (Frolic) என்ற ஆங்கிலக் கப்பலை அழித்தது. யுனைட்டட் ஸ்டேட்ஸ் (United States) என்ற கப்பல் மாசிடோனியன் (Macedonian) என்ற கப்பலைப் பிடித்துக் கொண்டது. கான்ஸ்டிடியுசன் என்ற கப்பல் ஜாவா என்ற மற்றுமொரு ஆங்கிலக்கப்பலை பிடித்து வெற்றி கண்டது.

ஆனாலும் 1813-க்குப் பிறகு ஆங்கிலேயர் சில வெற்றி களைப் பெற்றனர். செசபீக், பிரசிடென்ட் போன்ற அமெரிக்க கப்பல்களை இங்கிலாந்துக் கப்பல்கள் பிடித்துக் கொண்டன.

## ஈரி ஏரிப் போர் :

1812, 1813-ம் ஆண்டுகளில் எல்லைப் பகுதியில் இருந்த ஒண்டேரியோ ஏரி, ஈரிஏரிப் (Lakes Ontaria and Erie) பகுதிகளில் கப்பற்போர்நடைபெற்றது. ஒன்டேரிஏரிப்பகுதியில் நடைபெற்ற ஒரு குண்டு வெடிப்பில் ஐம்பதுக்கும் அதிகமான கனடியர்கள் கொல்லப்பட்டனர். யார்க்நகரம்பிடிக்கப்பட்டு எரிக்கப்பட்டது. பல்வேறு கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. அடுத்து ஈரி ஏரிப் போர் 1813. செப்டம்பர் 10-ல் நடைபெற்றது. இப்போரில் அமெரிக்க தளபதிஆலிவர்பெரி(Oliver H.Perry) வெற்றியடைந்தார். இதன் மூலம் ஈரி ஏரி அமெரிக்காவின் ஆதிக் கத்தின்கீழ் வந்தது. மேலும் கனடாவின்மீதுபடையெடுக்க வழிவகுத்துக் கொடுத்தது.

## கனடாவில் போர்

அடுத்து கனடாவில் இரண்டு முக்கியப்போர்கள் நடை பெற்றன. இதில் 1813 அக்டோபர் 5-ல் நடைபெற்ற தேம்ஸ் போரில் அமெரிக்க தளபதி ஹாரிசன் கனடியர்களையும் அவர்களது கூட்டாளிகளான செவ்விந்தியர்களையும் தோற் கடித்தார். இப்போரில்தான் தெகும்சே என்ற செவ்விந்தியத் தலை வர் கொல்லப்பட்டார். டெட்ராய்ட் நகரம் சரணடைந்தது. 1814 மார்ச் 27-ல் ஹாரிஸ் ஷி பென் (Horise Shee Ben) என்ற இடத்தில் நடந்த போரிலும் அமெரிக்கர் வெற்றியடைந்தனர். கனடாவைக் கைப்பற்ற ஜேக்கப் பிரவுன் (Jacob Brown) என்பவர்

தலைமையில்கடை சிமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. சிப்பாவா, லண்டீஸ் லேன் (Chiphawa, Lundys Lane) ஆகிய இடங்களில் 1814 ஜூலையில் இரண்டு போர்கள் நடைபெற்றது. ஆனால் அமெரிக்கர் பின் வாங்க நேரிட்டது.

## போரின் இறுதிக்கட்டம்

ஐரோப்பாவில் நெப்போலியனைத் தோற்கடித்தபின் இங்கிலாந்து தன்னுடைய மிகச்சிறந்த போர்த்தளபதிகளை அனுப்பி அமெரிக்காவைத் தோற்கடிக்க முயற்சி செய்தது. இந்தப் படைகள் நியுயார்க் மாநிலத்திற்குள் நுழைந்தபோது அமெரிக்கரால் தோற்கடிக்கப்பட்டது. மற்றொரு படை தலை நகர் வாஷிங்டனைத் தாக்கியது. 1814, ஆகஸ்ட் 24ல் அந்தப் படை வாஷிங்டன் நகருக்குள் புகுந்தன. குடியரசுத் தலைவர் மாளிகை தீவைக்கப்பட்டது.மற்றும்பலஅரசாங்கக் கட்டிடங்கள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. மாடிசன் தலைநகரிலிருந்து தப்பி ஓடினார். தீயினால் கருத்துப் போன குடியரசுத் தலைவர் மாளிகைக்குபின்னர் அமெரிக்கர்கள் வெள்ளையடித்து செப்பனிட்டதால் 'வெள்ளை மாளிகை' என்ற பெயர் பெற்றது.

வாஷிங்டன் மீது தாக்குதல் தொடுத்த பின்பு பால்டிமோர் நகரைக் கைப்பற்ற முயன்று தோற்றனர் ஆங்கிலேயர். அவர்கள் மெக்ஹென்றி என்ற கோட்டையைத் தாக்கிய போது தான் பிரான்சிஸ் ஸ்காட்கி (Francis Scott Key) என்பவர் 'விண்மீன் நிறைந்தகொடி'என்றகவிதையைஇயற்றினார். இந்தக் கவிதையே அமெரிக்காவின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நியு ஆர்லியன்ஸ்பகுதியில்ஆண்ட்ருஜாக்சன்தலைமையில் அமெரிக்கப் படைபெரும்வெற்றி பெற்றது.

## போரின் முடிவு

அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே போர் நிறுத்த ஏற்பாட்டிற்கு உதவி செய்ய ரஷ்யா முன்வந்தது. ஆனால் ரஷ்யாவின் உதவியை இங்கிலாந்து நிராகரித்து விட்டது. இறுதியாக அமெரிக்கா வுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான உடன்படிக்கை செய்துகொள்ள இங்கிலாந்து முன்வந்தது. 1814, ஆகஸ்ட் 8-ல் பெல்ஜியத்திலுள்ள கென்ட் (Ghent) நகரில்அமைதிக்கானபேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அமெரிக்காவின் சார்பில் ஜான்குவின்ஸி ஆடம்ஸ், ஹென்றி கிளே,ஆல்பர்ட்கலாடின் ஆகியோர்சென்றிருந்தார். பேச்சுவார்த்தைகளுக்குப்பின்1814,டிசம்பர்24-ல்உடன்படிக்கை கையெழுத்தானது.

## கென்ட் உடன்படிக்கை : 1814

கென்ட் உடன்படிக்கையில்போருக்குமுக்கியக் காரண மான மாலுமிகளைக் கவர்ந்து செல்லுதல் (Impressments) பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. போருக்குக் காரணமான எந்தப் பிரச்சனை பற்றியும் குறிப்பிடப்படாதது வேடிக்கையானது ஆகும். போருக்கு முந்திய நிலையை ஏற்றுக் கொள்ள இரு நாடு களும் ஒப்புக் கொண்டன. எல்லைக்கோடு, மீன் பிடிக்கும் உரிமை ஆகியவை பற்றிய சிக்கல்களைத் தீர்க்க நடுவர் குழு அமைக்க இரண்டு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

இதன் விள்ளவாக 1815-ஜூலையில் செய்து கொள்ளப் பட்ட வணிக உடன்படிக்கையின் மூலம் அமெரிக்கா மிகவும் நல்லுறவுடன் இங்கிலாந்துடன் வாணிகம் செய்ய முடிந்தது. ஆங்கிலேயருக் குரியவட அமெரிக்கக்கரைகளில் அமெரிக்கர்கள் குறிப்பிட்ட இடங்களில் மீன்பிடிக்கவும் பதப்படுத்தவும் ஒப்புதல் வழங்கப் பட்டது. 1817-ல் செய்யப்பட்ட ரஷ்பெகாட் (Rush Bagot) ஒப்பந்தத்தின்படி கிரேட்லேக் (Great lake) பகுதிகளில் இருநாடுகளும் போர்க்கப்பல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் கனடா அமெரிக்காவின் இடையிலான நீண்ட எல்லைப்பகுதியானதுஎவ்விதத் துருப்பு களும் செயல்படாத பகுதியாக மாற்றப்பட்டது. இந்த நிலைமை இன்று வரை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 1812 – ம் வருடப் போரின் விளைவுகள் : (முக்கியத்துவம்)

### 1. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே அமைதி நிலை நிலைநாட்டப்பட்டது :

1812-ம் வருடப் போருக்கு அடிப்படைக் காரணங்களான நடுநிலை உரிமைபற்றியோ, அமெரிக்க மாலுமிகளை கட்டா யமாககவர்ந்துகொண்டு செல்வது பற்றியோ உடன்படிக்கையில் எதுவும்சொல்லப்படவில்லை.ஆனாலும் இப்போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட வணிக உடன்பாடுகள், நடுவர் தீர்ப்பு வழி முடிவுகள் ஆகியவை இங்கிலாந்துக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும்இடையிலானகுழப்பமானநிலைக்கு முற்றுப் புள்ளிவைத்துஅமைதியைஏற்படுத்தியது.இரு நாடு களுக்கு மிடையே வாணிபம் பெருகியது.

### 2. செவ்விந்தியர்களின் தலைவிதிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது

1812-ம் வருடப் போரின் விளைவாக அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகள் வடமேற்கிலும், தென்மேற்கிலும் வளரத்

தொடங்கியது.அந்த இடங்களிலிருந்த இந்தியப் பழங்குடியினர் ஒழித்துக் கட்டப்பட்டனர். தெக்கும்சே இந்தப் போரில் கொல்லப்பட்டதால் தங்களுக்கென தனிமாநிலம் நிறுவத் திட்டப்பட்டதிட்டம் தோல்வியடைந்தது. அமெரிக்கர்களுடன் அவமானகரமான உடன்படிக்கையில் கையெழுத்திட்டு பரந்த நிலப்பரப்புகளை விட்டுக்கொடுத்தனர். இவ்வாறுசெவ்விந்தியப் பழங்குடியினர் அவர்களின் தாயகத்தி லிருந்து முறைகேடான வழிகளில் விரட்டியடிக்கப்பட்டனர்.

## 3. கூட்டாட்சிக் கட்சி செல்வாக்கு இழந்தது

இந்தப் போரை ஆரம்பத்திலிருந்தே வடமாநிலங்கள் விரும்பவில்லை.கூட்டாட்சிகட்சியின் கோட்டையாக விளங்கிய இந்தமாநிலங்கள்போரின்போதுமற்றமாநிலங்களுக்குஒத்துழை புத்தர மறுத்ததுடன் ஆங்கிலேயரிடம் விசுவாசம் காட்டின. இதனால் கூட்டாட்சி கட்சி மக்களிடம் செல்வாக்கு இழந்தது.

## 4. ஹார்ட் போர்ட் மாநாடு : 1814

இந்தப் போரின் போது செல்லுபடியற்றதாக்கும் கோட்பாடு மீண்டும் வற்புறுத்தப்பட்டது. கூட்டாட்சி அரசின் அதிகமான அதிகாரத்தினால்தான் இப்படிப்பட்ட போர்கள் ஏற்படுகின்றன என்று கருதப்பட்டது. கூட்டாட்சி அரசின் அதிகாரத்தைக் குறைப்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று வடமாநிலங்கள் வலியுறுத்தின. எனவே கனக்டிகட், ரோடுஐலந்து, மசாசுசெட்ஸ், நியுஹாம்ஷயர், வெர்மாண்ட் ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகள் 1814 அக்டோபரில் ஹார்ட்போர்ட் (Hartfort) என்ற இடத்தில் ஒரு மாநாடு கூட்டி விவாதித்தனர்.

இந்த மாநாட்டில் "அரசியலமைப்பு வரம்பினை மீறும் வகையில் காங்கிரசால் இயற்றப்படும் சட்டங்களை எதிர்க்க மாநிலங் களுக்கு உரிமை உண்டு, கூட்டாட்சி அரசுக்கு பிற நாட்டின் மீது போர்த் தொடுக்க உரிமை கொடுக்கப்படக் கூடாது, மாநிலத்தில் வசூலிக்கப்படும் வரிகள் மாநிலப் பாது காப்புக்கே செலவிடப்பட வேண்டும், குடியரசுத் தலைவர் ஒரு தடவை தான் பதவிவகிக்க வேண்டும்" போன்ற மாநில உரிமை களை வலியுறுத்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஆனால் இந்த ஹார்ட் போர்ட் கருத்துகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை.

## 5. மேற்குப் பகுதியில் வேகமான குடியேற்றம்

*1812*-ம் வருடப் போரில் செவ்விந்தியர் ஒழித்துக்கட்டப்

பட்டதால் அமெரிக்கர்கள் அச்சமில்லாமல் மேற்குப் பகுதியில் குடியேற ஆரம்பித்தனர். ஐம்பெரும் ஏரிகள் வழியாகவும், செயிண்ட்லாரன்ஸ் வழியாகவும் மேற்குப் பகுதியிலும் வாணிபத் தொடர்பு கொண்டனர். எனவே இப்போர் மேற்கு நோக்கி விரிவடைதலுக்கு ஊக்கம் அளித்தது.

### 6. தொழில் வளர்ச்சி

அமெரிக்காவில் தொழில் வளர்ச்சிக்கு இந்தப்போர் ஊக்கமளித்தது. போரின்போது அந்நியப் பொருட்களின் இறக்குமதி தடைபட்டுப் போனதால் உள்நாட்டில் புதிய தொழில்கள் வளர்ந்தன. இயந்திரங்கள் மூலம் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் முறை வளர்ச்சியடைந்தது.

மேலும் பிறநாடுகளுடன் வியாபாரம் வளர்ச்சி யடைந்தது. கச்சாப்பொருட்களை விற்பதற்கும், உற்பத்தி செய்யப் பட்ட பொருட்களை வாங்குவதற்கும் இங்கிலாந்து சந்தைகளை முழுமையாக நம்ப முடியாததால் அமெரிக்கர்கள் பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டனர். இதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. தொழிற்சாலைகள் பெருக நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டன.

### 7. தேசிய உணர்வின் எழுச்சி

1812-ம் வருடப்போர் அமெரிக்கர்களிடையே ஐக்கிய உணர்வையும் வளர்த்தது. தேசிய மனப்பான்மை வளர்ந்து, குறுகிய மாநில மனப்பான்மையும், பிரிந்து போகின்ற உணர்வும் மறையத் தொடங்கின. ஒரு வலுவான தேசிய அரசின் இன்றியமையாமையை இப்போர் மக்களுக்கு எடுத்துக் கூறியது.

### 8. தனித்திருத்தல் கொள்கை : Policy of Isolation

1815-ம் ஆண்டானது அமெரிக்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. ஐரோப்பிய விவகாரங்களில் தலை யிடுவதால் உண்டாகும் பயனற்ற தன்மையை அமெரிக்கா உணர ஆரம்பித்தது. எனவே 1815-லிருந்து ஐரோப்பிய அரசியலிலும், சர்வதேச அரசியலிலும் கவனம் செலுத்தவில்லை. இந்த தனித்திருத்தல் கொள்கையை ஒரு நூற்றாண்டு காலத்திற்கு அமெரிக்கா பின்பற்றியது குறிப்பிடத்தக்கது ஆகும். மாறாக உள்நாட்டு அரசியலில் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தது அமெரிக்கா.

## 1812–ம் வருடப்போர் இரண்டாவது விடுதலைப்போரா?

1812-ம் வருடப்போர் மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. அமெரிக்காவுக்கு எந்தவிதமான அடிப்படைப் பிரச்சனைகள்

இல்லாமலும், சரியான தயார் நிலையில் இல்லாத போதும் இப்போர் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தும் முழுமூச்சுடன் நெப்போலியனுக்கெதிராக ஐரோப்பாவில் போரில் ஈடுபட்டிருந்த போது இப்போர் நடந்தது. இரண்டு நாடுக்குளுமே தங்கள் சக்திகளை முழுமையாக பயன்படுத்த வில்லை. போரின் இறுதியில் எந்த நோக்கத்திற்காக போர் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. இருந்தாலும் அமெரிக்க வரலாற்றாசிரியர்கள் 1812-ம் வருடப் போரை இரண்டாவது விடுதலைப் போராகவே கருதுகின்றனர். 1776-ம் வருட அமெரிக்க சுதந்திரப் போருக்கும், 1812-ம் வருடப் போருக்கும் கீழ்க்கண்ட பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

a) முதலாவது, சுதந்திரமும், விடுதலையும் இரண்டு போர்களின் அடிப்படை நோக்கமாக இருந்தன. 1776-ல் அமெரிக்கா அரசியல் சுதந்திரம் பெறவும் மேற்கத்தியப் பகுதி களில் சுதந்திரமாக நில ஆதிக்கம் பெறவும் இங்கிலாந்துடன் போர்புரிந்தது. 1812-ல் கடல் போக்குவரத்து உரிமை பெறவும், நடுநிலை உரிமை மதிப்பிடவும், எந்த ஐரோப்பிய நாட்டின் தலையீடுமில்லாமல் மேற்கு நோக்கி செல்லவும் அமெரிக்கா போர் புரிந்தது.


b) இந்த இரண்டு போர்களும் நடைபெற்றபோது இங்கிலாந்தில் மூன்றாம் ஜார்ஜ் மன்னராக இருந்தார். இவர் இரண்டு போர்களையும் சமாளிக்கும் திறனற்றவராக இருந்தார். இறுதியில் இரண்டிலும் தோல்வியையே அடைந்தார்.

c) இரண்டு போர்களிலும் அமெரிக்கர்கள் ஐரோப்பாவில் அரசியல் நிலையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால் சுதந்திரப் போரில் இங்கிலாந்துக் கெதிராக பிரான்ஸ் அமெரிக்காவுக்கு உதவி செய்தது. 1812-ல் உதவி செய்யவில்லை.

d) இரண்டு போர்கள் நடைபெற்ற காலங்களில் அமெரிக்க மக்களிடையே கருத்து வேற்றுமை நிலவியது. சுதந்திரப்போரின் போது ஆங்கிலேயரிடம் விசுவாசம் கொண்ட குடியேற்ற விசுவாசிகள் அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டனர். தீவிரவாதிகளே இங்கிலாந்துக் கெதிராகப் போரிட்டனர். 1812-லும் நியு இங்கிலாந்து பகுதியிலுள்ள கூட்டாட்சிகட்சியினர் இங்கிலாந்துடன் போர்புரிவதை விரும்பவில்லை. வாணிபத் தடைகூட்டங்களை எதிர்த்தனர். ஹார்ட்போர்டில் ஒரு மாநாட்டைக்கூட்டி போரைக் கண்டித்தனர். ஆனால் இவர்கள் இங்கிலாந்துடன் சேர்ந்து கொள்ளவில்லை. இவ்வாறு இரண்டு போர்களிலும் கருத்து வேற்றுமை நிலவியது.

d) இரண்டு போர்களும் திட்டவட்டமான முடிவுகளை ஏற்படுத்த வில்லை. இந்த போர்களின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கைகள் எந்த பிரச்சனைகளையும் முழுமையாகத் தீர்க்கவில்லை. இருபோர்களிலும் இரண்டு நாடுகளும் வெற்றி களையும் தோல்விகளையும் சந்தித்தன. போரில் சலிப்புற்றே சமாதானம் செய்து கொள்ள முடிவு செய்தன.

இவ்வாறு பல வழிகளில் 1812-ம் வருடப்போர் அமெரிக்கா சுதந்திரப் போரை போன்றே காணப்படுகிறது. சுதந்திரப்போரின் போது அரசியல் சுதந்திரம் பெற்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் பொருளாதார பண்பாட்டுத் துறைகளில் இங்கிலாந்தைச் சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போரின் போது இந்த நிலை மாறி, அமெரிக்கர்கள் பெருமளவில் வியாபாரத் தொடர்பு கொள்ள ஏனைய நாடுகளை நாடினர். இதன் மூலம் பிறபகுதிகளுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. இதன் காரணமாக பண்பாட்டுத் தொடர்பும் வளர ஆரம்பித்தது . மொத்தத்தில் 1812-ம் வருடப் போர் அமெரிக்கர்களின் கொள்கைகளை விரிவுபடுத்தியதுடன், அவர்கள் தங்கள் தன்னம்பிக்கை மற்றும் தேசிய உணர்வுகளை உறுதிப்படுத்திக் கொள்ள உதவியது.



ஜேம்ஸ் மாடிசன், டாலி மாடிசன்,

## ஜேம்ஸ் மாடிசனைப் பற்றிய மதிப்பீடு :

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நான்காவது குடியரசுத் தலைவரான ஜேம்ஸ் மாடிசன் வர்ஜினியாவைச் சேர்ந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்த பின்பு தீவிர அரசியலில் இறங்கினார். வர்ஜினியா சட்டமன்றத்திலும் பின்னர் கண்ட காங்கிரசிலும் உறுப்பினராக இருந்தார். அமெரிக்காவின்

அரசியலமைப்பை வரைந்ததில் இவருக்கும் முக்கிய பங்கு உண்டு. 'கூட்டாட்சி கட்டுரைகள்' (Federalist Papers) என்ற தொகுப்பில் மாடிசன் இருபத்தெட்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். உரிமைகள் மசோதா எனப்பட்ட முதல் பத்து திருத்தங்கள் பெரும்பாலும் இவரால் வரையப்பட்டவையே ஆகும்.

மாடிசனும், ஜெபர்சனும் இளமைக்காலம் முதலே நண்பர்களாக இருந்தனர். ஹாமில்டனின் பொருளாதாரத் திட்டங்களையும், ஆடம்ஸ் காலத்தில் இயற்றப்பட்ட அடக்கு முறைச் சட்டங்களையும் எதிர்த்தனர். 1801 முதல் 1809 வரை ஜெபர்சனின் அயல் விவகார அமைச்சராக பணியாற்றினார். பின்னர் 1809-ல் குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டு ஜெபர்சனின் ஆதரவுடன் 122க்கு 47 என்ற ஓட்டு விகிதம் பெற்ற கூட்டாட்சி கட்சி வேட்பாளர் சார்லஸ் பின்க்னேயை (Charles Pinkney) தோற்கடித்தார்.

இவ்வளவு அனுபவமும் புகழும் உடையவராக இருந்தாலும் மாடிசனால் திறமைமிக்க குடியரசுத் தலைவராக விளங்கமுடியவில்லை.பிரச்சனைகளை ஆராய்ந்து அவைகளுககு உடனடித் தீர்வு காணும் தன்மையும் திறமையும் அற்றவராக இருந்தார். தோற்றத்தில் அவர் குள்ளமாக இருந்ததால் தலைவர் என்ற முறையில் தனது தனித்தன்மையை சிறப்பாக புலப்படுத்த முடியவில்லை. ஒரு சிறந்த குடியரசுத் தலைவராக இருப்பதற்கு வேண்டிய தோற்றமோ அரசியல் திறனோ அவரிடம் இல்லை. ஆனால் அவரது அழகிய மனைவியால் மாடிசனின் குறைகள் பெருமளவில் நிவர்த்தி செய்யப்பட்டன. அவர் மனைவியின் பெயர் டாலி மாடிசன் (Dolly). வட கரோலினாவில் பிறந்தவர். ஒரு புகழ்பெற்ற சமூக சேவகியாகத் திகழ்ந்தார். வெள்ளை மாளிகையில் கணவருடன் சிறந்த முறையில் வாழ்ந்தார் டாலி.

## 12. ஜேம்ஸ் மன்றோ
### (James Monroe, 1817-1825)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மிகச் சிறந்த குடியரசுத் தலைவர்களில் ஜேம்ஸ் மன்றோவும் ஒருவர் ஆவார். திறமைக்கு எடுத்துக்காட்டாகவும், சீர்திருத்தக் கொள்கைகளுக்கும், விவேகமுள்ள பழைமை கொள்கைகளுக்கு பிறப்பிடமாகவும் விளங்கினார். இவர் பதவிவகித்த எட்டு ஆண்டு காலத்தில் கட்சி

சார்பான எவ்வித சிக்கல்களும், பூசல்களும் போராட்டங்களும் தோன்றவில்லை. எனவே இவரது காலம் 'நல்லெண்ணங்களின் சகாப்தம்' (Era of Good Feelings) என்றழைக்கப்படுகிறது. மேலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளி உறவுக்கொள்கையில் உன்னதமான இடத்தைப்பெற்றுள்ளார் மன்றோ.

## மன்றோவின் வாழ்க்கைக் குறிப்பு :

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஐந்தாவது குடியரசுத் தலைவரான ஜேம்ஸ் மன்றோ 1758-ல் வர்ஜினியாவில் பிறந்தார். வில்லிம் மேரி கல்லூரியில் கல்வி கற்றார். விடுதலைப் போரில் வீரமுடன் பங்கேற்றார். பின்னர் ஜெபர்சனிடம் சட்டம் பயின்றதுடன் அவரது நெருங்கிய நண்பரானார். வர்ஜினிய சட்டமன்றத்திலும், பின்னர் நெகிழ் கூட்டாட்சி காங்கிரசிலும் உறுப்பினரானார். 1780-ல் செனட் உறுப்பினரானார். 1794-ல் பிரான்சுக்கு அமெரிக்க தூதராக அனுப்பப்பட்டார். 1799 முதல் 1802 வரை வர்ஜினியா மாகாண கவர்னராகப் பணியாற்றினார்.

பின்னர் ஜெபர்சன் காலத்தில் லூசியானாவை விலைக்கு வாங்க விசேஷ தூதுவராக பிரான்சுக்கு அனுப்பப்பட்டார். 1803 முதல் 1806 வரை இங்கிலாந்து தூதராகப் பணியாற்றினார். 1811-ல் மாடிசனின் அயல் விவகாரத் துறை அமைச்சரானார். 1816-ம் வருட குடியரசுத் தலைவர் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ரூபஸ் கிங் (Rufus King) என்பவரை 183க்கு 34 வாக்குகள் என்ற விகிதத்தில் தோற்கடித்து குடியரசுத் தலைவரானார். 1820-ல் நடைபெற்ற தேர்தலில் எதிர்ப்பார் யாருமில்லாமல் 232 வாக்குகளில் 231-ஐப் பெற்று அமோக வெற்றி பெற்றார். இவ்வாறு எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் குடியரசுக் கட்சி ஆட்சியமைத்த இவரது காலம் 'ஒரு நல்லெண்ண சகாப்த காலம்' என்று கூறுவது பொருத்தமே ஆகும்.

## மன்றோவின் உள்நாட்டுக் கொள்கை

**(நல்லெண்ண சகாப்தம் – Era of Good Feeling)**

### 1) மன்றோவின் புதிய மந்திரி சபையும், நல்லெண்ணக் காலமும்:

மன்றோ தனது மந்திரி சபையில் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு செய்தார். புதிய இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான்குவின்சி ஆடம்ஸை தன் அயல் விவகார அமைச்சராக நியமித்தார். ஜான் கால்கூன் போர்த் துறை அமைச்சராகவும், ஜார்ஜியாவைச் சார்ந்த வில்லியம் கிராபோர்ட் (William H Crawford) கருவூல அமைச்சராகவும், ஹென்றிகிளே என்பவர் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராகவும்

நியமிக்கப்பட்டனர்.

மன்றோ குடியரசுத்தலைவராகப் பதவி ஏற்றவுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்தார். எல்லா ஊர்களிலும் மக்கள் திரளாக வந்து அவரை வரவேற்றனர். இவர் பாஸ்டன் பகுதியில் சுற்றுப் பயணம் செய்யும்போது கொலம்பியன் சென்டினல் (Columbian Centinel) என்ற பத்திரிக்கை மிகவும் மகிழ்ச்சியூட்டும் வகையில் அதிபரை வரவேற்று எழுதியது. இந்த பத்திரிக்கை செய்தியானது. நாடெங்கிலும் பரவியது. மக்களும் இந்த உணர்வு கொண்டனர். ஒரு புதிய காலம் அமெரிக்காவில் தோன்றிவிட்டது என்றே கருதப்பட்டது.

இந்த நல்லெண்ண காலத்தில் கூட்டாட்சிக்கட்சியினர் பலர் குடியரசுக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டனர். குடியரசுக் கட்சியினர் பலர் கூட்டாட்சிக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டனர். சரியோ தவறோ நம் நாட்டையே ஆதரிக்க வேண்டும் என்று எண்ணி தங்களுக்கிடையிலான பூசல்களை மறந்து மக்கள் ஒன்றுபட்டு நின்றனர். 1818-ல் அமெரிக்காவின்தேசியகீதமும்,தேசியக்கொடியும் உருப் பெற்றன. எல்லாக் கட்சியினரும், எல்லா மக்களும் தங்கள் பின் நிற்கின்றனர் என்று சொல்லி குடியரசுக் கட்சியினர் தங்களை 'ஜனநாயகக் குடியரசுக்கட்சியினர்' (Democratic Republicans) என்று அழைத்துக் கொண்டனர்.

## 2) புளோரிடா இணைத்துக் கொள்ளப்படுதல்

ஸ்பானிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த புளோரிடா இரு பகுதி களைக் கொண்டிருந்தது. ஒன்று மேற்கு புளோரிடா மற்றொன்று கிழக்கு புளோரிடா, மேற்கு புளோரிடாவை ஏற்கனவே அமெரிக்கா இணைத்துக் கொண்டது. கிழக்குப் பகுதியில் பெரும்பாலும் செமினால் (Seminole) என்றழைக்கப் படும் பழங்குடியினரே வாழ்ந்து வந்தனர். இந்தப்பகுதியை அமெரிக்காவுக்கு விற்பதற்கு ஸ்பெயின் மறுத்துவந்தது. இந்த நிலையில் அமெரிக்கர்களுக்கு விரோதமாக செவ்விந்தியர் களுக்கும், தப்பி ஓடும் அடிமைகளுக்கும் புகலிடமாக மாறி விட்டது என்று ஜாண்குவின்சி ஆடம்ஸ் குற்றம் சாட்டினார். அத்துடன் ஸ்பானியத் தூதர் டான்லூயிடி ஓனிஸ் (Don Louis De Onis) என்பவருடன் ஆடம்ஸ் கிழக்கு புளோரிடா பற்றி பேச்சுவார்த்தை ஆரம்பித்தார்.

இதற்கிடையில் கிழக்கு புளோரிடாவிலிருந்த செவ்விந்திய பழங்குடியினரும் எல்லைப்புறத்தில் இருந்த அமெரிக்கர்களுக்கு

அதிக தொல்லை கொடுத்து வந்தனர். பொறுமை இழந்த மன்றோ இந்தியர்களையும் நீக்ரோக் களையும் தண்டிக்குமாறு ஜாக்சனுக்கு கட்டளையிட்டார். ஸ்பானிய நகரங்களான செயின்ட் மார்க்ஸ், பென்சகோலா, (St. Marks, Pensagola) ஆகியவற்றைத் தரைமட்டமாக்கினார். அப்போது லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் ஸ்பானிய அரசுக்கெதிராக புரட்சி நடைபெற்று வந்தது. இங்கிலாந்தும் ஸ்பெயினுக்கு ஆதரவாக இப்பிரச்சனையில் தலையிட மறுத்து விட்டது.எனவேகிழக்குபுளோரிடாவைஅமெரிக்கா வன் முறையில் கைப்பற்றிவிடும் என்று அஞ்சிய ஸ்பெயின் புளோரிடாவை விற்றுவிட முடிவு செய்தது.

## ஆடம்ஸ் ஒனிஸ் உடன்படிக்கை 1819 :

*1819-ல்* அமெரிக்காவும், ஸ்பெயினும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக ஆடம்ஸ்-ஒனிஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி,

a) ஐந்து மில்லியன் டாலருக்கு கிழக்கு புளோரிடாவையும், மேற் புளோரிடா மீது கொண்டிருந்த உரிமையையும் ஸ்பெயின் அமெரிக்காவுக்கு விட்டுக் கொடுத்தது.

b) ஸ்பெயினிடமிருந்து நஷ்ட ஈடு கேட்டு வந்த அமெரிக்கர்களுக்கே அந்த தொகை கொடுக்கப்பட வேண்டும். (இவ்வாறு ஒரு பைசாக்கூட கொடுக்காமல் அமெரிக்கா புளோரிடா முழுவதையும் பெற்றுக் கொண்டது)

c) மெக்சிகோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வடமேற்கு எல்லைக் கோடும் முடிவு செய்யப்பட்டது. சபைன் நதியிலிருந்து அர்கான்சாஸ் வரை $42^0$ பூமத்திய ரேகைக்கு வடக்கில் ஒரு ஒழுங்கற்ற எல்லைக் கோடு வரையப்பட்டது.

d) பசிபிக்கடற்கரைப் பகுதியில் 42 வது அட்ச ரேகைக்கு வடக்கில் உள்ள எல்லாப் பகுதிகள் மீதுள்ள உரிமைகளையும் விட்டுக் கொடுத்தது ஸ்பெயின்.

இந்த ஒப்பந்தம் 1821-ல் ஸ்பெயின் நாட்டால் அங்கிகரிக்கப் பட்டு செயல்படத் தொடங்கியது. இதன் மூலம் அமெரிக்கா தனது எல்லையை பசிபிக்கடல் வரை நீட்டிச் செல்ல ஏதுவானது.

## 3) அமெரிக்காவுக்கும் கனடாவுக்குமிடையே எல்லை நிர்ணயம்

கென்ட் உடன்படிக்கைக்கு பிறகு தங்களுக்கிடையிலான மற்ற பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அமெரிக்காவும் இங்கிலாந்தும் பேச்சுவார்த்தை நடத்தின. அதன் விளைவாக இரண்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 1817-ஏப்ரலில் கையெழுத்தான ரஷ் -பேகாட் (Rush Bagot) ஒப்பந் தத்தின்படி-

அமெரிக்காவும் இங்கிலாந்தும் பெரிய ஏரிகளில் ஒவ்வொரு நாடும் எத்தனை கப்பல்கள் வைத்துக் கொள்ளலாம் என்பது நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி அங்கு கடற்படை இருக்கக்கூடாது. காவல் படகுகள் மட்டுமே வைத்துக் கொள்ளலாம் 1818-ல் செய்து கொள்ளப்பட்ட மற்றொரு உடன் படிக்கையின்படி ஏரிகளிலிருந்து ராக்கி மலைவரையில் 49வது அட்சரேகை இருநாடுகளுக்கும் எல்லைக்கோடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏரிகள் பிரதேசத்தை இருநாடுகளும்பத்து ஆண்டுகள் கூட்டாகநிர்வகிக்கலாம் என்று முடிவு செய்யப் பட்டது.

**4) மிசௌரி சமரசம்: Missourie Compromise, 1820.**

மன்றோவின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் நாடு முழுவதிலும் அடிமை முறை பற்றிய விவாதம் நடைபெற்று வந்தது. அதுதார்மீகம், மனிதாபிமானம், அரசியல் ஆகிய கோணங்களில் விவாதிக்கப்பட்டு வந்தது. வடமாநிலங்களில் அடிமைமுறை தேவையில்லாமலும் அதற்கு எதிர்ப்பும் நிலவியது. ஆனால் தென் மாநிலங் களில் அடிமை முறை அவசியமாகக் கருதப் பட்டது.

லுசியானாப் பகுதியில் மக்கள் தொகை வேகமாக வளர்ச்சி யடைந்து வந்தது. அதில் ஒரு பகுதியான மிசௌரியில் 1818-ல் 60,000 பேர் வாழ்ந்து வந்தனர். இந்த மிசௌரிபிரதேசம் ஒரு மாநிலமாக அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரியது. அப்போது நாட்டில் இருந்த 22 மாநிலங்களில், பதினொரு வட மாநிலங்கள் அடிமை முறையைத் தடைசெய்திருந்தன. பதினொரு தென் மாநிலங்கள் அடிமை முறையை ஏற்றுக் கொண்டிருந்தன. இந்த நிலையில் புதிதாகச் சேரவிரும்பும் பகுதியில் அடிமை முறை அனுமதிக்கப்படலாமா என்பதே பிரச்சனை.

மிசௌரி அடிமை முறையை ஏற்றுக் கொள்ளும் மாநிலமாக சேர்க்கப்பட்டால் காங்கிரசில் சமநிலை பாதிக்கப்படும் என்று வடபகுதியைச் சேர்ந்த மாநிலங்கள் அஞ்சின. புதிய மாநிலங்களில் அடிமைமுறையை ஆதரித்தும் எதிர்த்தும் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அடிமை நிலைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஜான் டால்மட்ஜ் (John Talimadge) என்பவரின் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. நாடு முழு வதிலும் வட மாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கு மிடையே காழ்ப்புணர்வும், விரோதமும் தோன்றின.

அப்போது வடகிழக்குப் பகுதியில் மெயின் (Main) என்ற பகுதி மசாசூ செட்சிலிருந்து பிரிந்து போய் சுதந்திர மாநிலமாக ஆகவிரும்பியது. அப்போதுபிரதிநிதிகள்சபையின் அவைத்

தலைவராக இருந்த ஹென்றி கிளே அனைவரிடமும் பேசி இந்த மிசௌரி பிரச்சனையை சமரசமாகத் தீர்த்து வைக்க முயன்றார். 1820-ல் ஒரு தற்காலிக சமரசம் பேசப்பட்டது. அதன்படி செய்து கொள்ளப்பட்டது தான் 'மிசௌரி சமரசம்' ஆகும். இதன்படி,

a) மிசௌரி அடிமை நிலை உள்ள மாநிலமாகவும், மெயின் அடிமை நிலை இல்லாத மாநிலமாகவும் சேர்த்துக் கொள்ளபட வேண்டும்.

b) $36^0$, $30^0$ வட அட்சரேகைக்கு வடபகுதியில் உள்ள பிரதேசங்களில் அடிமை நிலை இருக்கக் கூடாது. மிசௌரி மட்டும் இதற்கு விதி விலக்காக இருக்கும். இதுதான் 'மிசௌரி சமரசம்' ஆகும். இது தற்காலிகமான ஏற்பாடுதான். பெரிய தேசிய பிரச்சனை ஒன்று நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்காக காத்திருந்தது. இந்த சமரசம் உடனடியாக அப்போது ஏற்பட்ட அரசியல் சிக்கலை ஒத்திவைத்தது என்றே கருதலாம். எதிர் காலத்தில் இதுஒரு மாபெரும் பிரச்சனையாக வளரும் என்பதை அப்போது அறிஞர்கள் உணர்ந்தனர்.

## ஜேம்ஸ் மன்றோவின் வெளிநாட்டுக் கொள்கை:

### மன்றோ கோட்பாடு : Monroe Doctrine

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் மன்றோவின் பெயர் என்றும் சிறப்பாகக் கருதப்படுவதற்கான காரணம் அவர் வகுத்த புகழ்மிக்க வெளிநாட்டுக் கொள்கையோடு அவரது பெயர் பின்னிப்பிணைந்திருப்பதே காரணம் ஆகும். மன்றோ கோட்பாடு அமெரிக்க வெளிநாட்டுறவில் மிக முக்கியமான ஒரு பத்திரமாகக் கருதப்படுகிறது. இது அமெரிக்காவின் தனித் திருத்தல் கொள்கையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அத்துடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தனிப்பட்ட முன்னேற் றத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஒரு சிறந்த ஆயுதமாக உதவிய துடன் மட்டுமல்லாது ஒரு வலிமைமிக்க கேடயமாகவும் விளங் கியது. மொத்தத்தில் தனது வலிமையை நன்கு உணர்ந்து கொண்ட அமெரிக்கா, அமெரிக்க கண்டத்தில் தனது ஆதிக் கத்தை ஏற்படுத்தும் எண்ணத்தின் பிரதிபலிப்பே மன்றோக் கோட்பாடு ஆகும்.

### மன்றோ கோட்பாடு வகுக்கப்படக் காரணமான சூழ்நிலைகள்:

a) **அமெரிக்காவில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்**

மன்றோக் கோட்பாடு வகுக்கப்படக் காரணம் ரஷ்யா விடமிருந்து வந்த மிரட்டலே ஆகும். அமெரிக்காவின் வடமேற்கு பகுதியிலிருந்த அலாஸ்கா (Alaska) நிலப்பகுதியை ரஷ்யா தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அதன் ஆளுநராக இருந்த

அலக்சாண்டர் பரனோவ் (Alexander Baranov) என்பவர் அமெரிக்கருடன் வலுச்சண்டையில் ஈடுப்பட்டார். போர்ட் ரைஸ் (Port Rise) என்ற இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினார். அதே சமயம் ரஷ்ய முதலாம் அலக்சாந்தர் ரஷ்யாவின் எல்லைக்கோட்டை $50^0$ லிருந்து $51^0$ க்கு மாற்றி கூறி அதற்குட்பட்ட நிலமெல்லாம் ரஷ்யாவுக்குச் சொந்தமானது என்று 1821-ல் அறிவித்தார். மேலும் வெளிநாட்டுக் கப்பல்கள் அமெரிக்கக் கடற்கரையிலிருந்து நூறுமைல் தொலைவுக்குள் வரக் கூடாது என்று கட்டளையிட்டார்.

இவ்வாறு வடபகுதியில் தனது ஆதிக்கத்தைப் பெருக்குவதில்ரஷ்யா முனைந்தது.ரஷ்யாவின்இந்த நடவடிக்கைகள் ஒரிகான் பகுதி நோக்கிய அமெரிக்காவின் நில ஆதிக்க வளர்ச்சிக்கு மறைமுக மிரட்டல் என்று கருதினார் மன்றோ.

**b) ஐரோப்பிய கூட்டமைப்பின் நடவடிக்கைகள்:**

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பாவில் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து 'ஐரோப்பியக் கூட்டமைப்பு' (Concert of Europe) ஒன்றை அமைத்துக் கொண்டன. இதன் முக்கிய நோக்கம் முடியாட்சிக்கெதிரான புரட்சி இயக்கங்களை ஒடுக்குவதேயாகும்.

அப்போது தென் அமெரிக்காவில் ஸ்பெயினுக்கு எதிராக பலகுடியேற்றங்களில் உரிமைப் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பல ஸ்பானியக் குடியேற்றங்கள் சுதந்திரம் பெற்றன. 1822-ல் வெரோனாவில் கூடிய ஐரோப்பியக் கூட்டமைப்பு மாநாட்டில் தென் அமெரிக்கக் குடியேற்றங்களில் நடைபெறும் புரட்சி இயக்கங்களை அடக்க முடிவு செய்யப்பட்டது. லத்தீன் அமெரிக்காவைக் கைப்பற்றுவதற்கு ஐரோப்பிய மன்னர்கள் ஸ்பெயினுக்கு உதவி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டது. தென் அமெரிக்காவில் மீண்டும் முடியாட்சி நிறுவப்படுவதற்கான முயற்சிகளைக் கண்ட அமெரிக்கா அஞ்சியது.

**c) தென்அமெரிக்க நாடுகளுக்கு அமெரிக்காவின் ஆதரவு**

தென் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற பிரச்சனைகளில் அமெரிக்கா அதிகக் கவனம் செலுத்தியது. தனது முழுப் பரிவையும் காண்பித்தது. காரணம் தென் அமெரிக்க ஸ்பானியக் குடியேற்ற மக்கள் அமெரிக்க குடியேற்ற மக்களைப் போலவே விடுதலைக்காகவே போராடினர்.மேலும் தங்கள் நாட்டின் அருகே ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்படும் என்றால்

அது தங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அமெரிக்கர் கருதினர். எல்லாவற்றிற்கும் மேலாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் மீண்டும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால் அந்த நாடுகளுடன் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யமுடியாது என்று கருதியது அமெரிக்கா. எனவே ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டை தடுக்க உறுதிபூண்டது அமெரிக்கா.

### d) இங்கிலாந்தின் நிலை:

ஐரோப்பியக் கூட்டமைப்பில் ஒரு உறுப்பு நாடான இங்கிலாந்துதென் அமெரிக்கவிடுதலைஇயக்கங்களை நசுக்குவதை விரும்பவில்லை. இங்கிலாந்து புரட்சி இயக்கங்களை ஆதரித்து ஐரோப்பியக் கூட்டமைப் பிலிருந்து விலகியது. தென் அமெரிக்க ஸ்பானியக் குடியேற்றங்களை ஐரோப்பிய நாடுகள் மீண்டும் கைப்பற்றுவதை தடுக்க விரும்பியது. இதற்கு முக்கிய காரணம் லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இங்கிலாந்து லாபகரமான வாணிப உறவுகளை ஏற்படுத்தி இருந்ததேயாகும். அதேசமயம் பழைய ஸ்பானியக் குடியேற்றங்களை அமெரிக்கா அபகரித்துக்கொள்ளுவதையும்தடுக்க விரும்பியது இங்கிலாந்து.

### e) இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் கானிங்பிரபுவின் ஆலோசனை:

இந்தசந்தர்ப்பத்தில் இங்கிலாந்து வெளிஉறவு அமைச்சர் ஜார்ஜ் கானிங் இங்கிலாந்திலிருந்த அமெரிக்கா தூதுவரான ரிச்சர்ட் ரஷ் (Richard Rush) என்பவரிடம் இங்கிலாந்தும், அமெரிக்காவும் சேர்ந்து தென்அமெரிக்க குடியரசுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு கூட்டறிக்கை வெளியிடலாம் என நட்பு முறையில் 1823-ஆகஸ்டில் கருத்து தெரிவித்தார். அப்படி வெளியிடப்படும்அறிக்கையில் இங்கிலாந்தோ அமெரிக்காவோ இலத்தீன் அமெரிக்க நாடுகளை இணைத்துக் கொள்ளாது என்றும், தென் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய நாடுகள் வலுக்கட்டாயமாக தங்கள் ஆட்சியைத் திணிக்க கூடாது என்றும் தெளிவு படுத்த விரும்பினார்.

கானிங்கின் இந்த ஆலோசனையை மன்றோ ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலையில்தான் இருந்தார். ஆனால் வெளிஉறவுச் செயலர் ஜான்குவின்சி ஆடம்ஸ் இங்கிலாந்துடன் சேர்ந்து கூட்டறிக்கை வெளியிடுவதை விரும்பவில்லை. அமெரிக்க கண்ட விவகாரத்தில் இங்கிலாந்து தலையிடுவதையும், தனது எதிர்கால விஸ்தரிப்புக் கொள்கையை தானே விட்டுவிடவும் அமெரிக்கா

விரும்பவில்லை. மேலும் உலகத்தின் மேற்பாதி பற்றி பிரச்சனையில் இங்கிலாந்து செல்வாக்கு பெற குவின்சி ஆடம்ஸ் விரும்பவில்லை.

## மன்றோக் கோட்பாடு வெளியிடப்படுதல்: 1823

அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனியாகவே நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்று வலியுறுத்தினார் ஆடம்ஸ். இக்கருத்தை மன்றோவும் ஏற்றுக்கொண்டார். 'அமெரிக்கக் கண்டத்தின் அரசியலில் ஐரோப்பிய நாடுகள் தலையிடக் கூடாது' என்பதை 1823, டிசம்பர் 2-ம் தேதி காங்கிரசுக்கு அனுப்பிய ஓர் அறிக்கையில் வெளியிட்டார். அதுவே பின்னர் 'மன்றோ கோட்பாடு' என்று அழைக்கப்பட்டது.

a) அமெரிக்க கண்டங்கள் சுதந்திரமானவை. சுதந்திரமாகச் செயல்பட்டு வருபவை ஆகும். எனவே எதிர்காலத்தில் எந்த ஐரோப்பிய நாடும் குடியேற்றத்திற்கான இடமாக அமெரிக்க கண்டத்தை கருதக் கூடாது.

b) லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் தலையிட்டாலோ, அந்த நாடுகளின் எதிர்கால விதியை கட்டுப்படுத்த நினைத்தாலோ அதனை அமெரிக்க ஐக்கிய நாடுகள் நட்பின் அடையாளமாக எடுத்துக் கொள்ளாது.

c) ஐரோப்பிய அரசியல் முறையை அமெரிக்க கண்டங்களின் எப்பகுதியில் திணிக்க நினைத்தாலும் அதனை அமெரிக்கஐக்கியநாடுகள்தனதுசமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் தீங்கிழைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே கருதும்.

d) ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்படும் போர்களிலும், அரசியல் விவகாரங்களிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலையிட ஆர்வம் காட்டாது.